தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 153 14.01.2026 புதன்கிழமை
Chennai | Volume: 01 | Issue: 153 | Wednesday | pages 8 | Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

புதன்கிழமை
(14-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -30
பிறை: தேய்பிறை
திதி
ஏகாதசி இரவு 07.43 வரை
பிறகு துவாதசி
நட்சத்திரம்:
அனுஷம் மறுநாள்
விடியற்காலை 04.55 வரை
பிறகு கேட்டை
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி
மாலை 4–5 மணி

மேஷம் ........ லாபம்
ரிஷபம் ........ அன்பு
மிதுனம் ........ நிம்மதி
கடகம் ........ பக்தி
சிம்மம் ........ ஆதாயம்
கன்னி ........ தனம்
துலாம் ........ விவேகம்
விருச்சிகம் ........ ஆதரவு
தனுசு ........ பணிவு
மகரம் ........ தெளிவு
கும்பம் ........ நன்மை
மீனம் ........ பயணம்

# பொங்கல் பண்டிகை விழா: மக்கள் சொந்த ஊருக்கு பயணம்



**சென்னை,ஜன.14:**

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி வெளியூர்களில் வசிப்பவர்கள் தங்களது சொந்த ஊர் சென்று பண்டிகையை கொண்டாட தயாராகி வருகின்றனர்.

சென்னையில் இருந்து வெளியூர் செல்வதற்காக பயணிகளின் வசதிக்காக வழக்கமான அரசு பஸ்களோடு, சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகிறது.

அந்த வகையில் கடந்த 9-ந் தேதி முதல் நேற்று வரை அதாவது 4 நாட்களில் மொத்தம் 11 ஆயிரத்து 372 பஸ்கள் இயக்கப்பட்டதில் 4 லட்சத்து 88 ஆயிரத்து 780 பயணிகள் பயணம் செய்துள்ளனர். அத்துடன் இதுவரை 2 லட்சத்து 56 ஆயிரத்து 977 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழக மீனவர்கள் 10 பேர் கைது!



**ராமேசுவரம்,ஜன.14:**

அனுமதிச் சீட்டு பெற்று கடலுக்குச் சென்ற ராமேசுவரத்தை சேர்ந்த 10 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

மேலும், அவர்களின் விசைப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

நெடுந்தீவு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட மீனவர்களை காரைநகர் கடற்படை முகாமில் வைத்து இலங்கை படையினர் விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடிக்கும் குற்றத்துக்காக தொடர்ந்து இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர்.

மேலும், அவர்கள் செல்லும் விசைப்படகுகளையும் பறிமுதல் செய்து நாட்டுமையாக்கி வருகின்றனர். கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு பல லட்சம் ரூபாய் அபராதமாக இலங்கை நீதிமன்றம் விதித்து வருகின்றது.

தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி தொடர்ந்து நரேந்திர மோடி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின கடிதம் எழுதி வருகிறார்.

# புதிய உச்சம் தொட்ட தங்கம் விலை

**சென்னை,ஜன.14:**

சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை காலை, மாலை என இருவேளைகளில் உயர்ந்து வரலாறு காணாத உச்சத்தில் விற்பனையாகிறது. இதனால் சுபநிகழ்ச்சிகளுக்காக தங்கம் வாங்க நினைப்போருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், வார தொடக்க நாளான நேற்றும் தங்கம் விலை அதிரடியாக கிராமுக்கு 220 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,120-க்கும் சவரனுக்கு 1,760 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 960 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று ஒரே நாளில் கிராமுக்கு 12 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம்



வெள்ளி 287 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இன்றும் தங்கம் உயர்ந்துள்ளது. கிராமுக்கு 50 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,170-க்கும் சவரனுக்கு 400 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 360 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. இதன்மூலம் தங்கம் புதிய உச்சத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்துக்கு போட்டியாக வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. அந்த வகையில், இன்று கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 292 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடைசி ஐந்து நாள் தங்கம் விலை நிலவரம்:-

12-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,04,960
11-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,03,200
10-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,03,200
9-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,02,400
8-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,02,000

# 'நாங்கள் போரை நாடவில்லை; ஆனால்...' - ஈரான் கூறுவது என்ன?

**தெஹ்ரான்,ஜன.14:**

"ஈரான் போருக்கு முழுமையாகத் தயாராக உள்ளது. அதேநேரத்தில் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறது" என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்தார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற வெளிநாட்டுத் தூதர்களின் மாநாட்டில் அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட உரையில் பேசிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "ஈரான் இஸ்லாமியக் குடியரசு போரை நாடவில்லை; ஆனால், போருக்கு முழுமையாகத் தயாராக உள்ளது. நாங்கள் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறோம்.

ஆனால், அந்தப் பேச்சுவார்த்தைகள் நியாயமானதாகவும், சம உரிமைகளுடனும், பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

நாடு தழுவிய போராட்டங்களுக்குப் பிறகு நிலைமை தற்போது முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தப் போராட்டங்கள், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தலையிடுவதற்கு ஒரு சாக்குப்போக்கு அளிக்கும் வகையில் வன்முறை மற்றும் ரத்தக்களரியாக மாறியது" எனத் தெரிவித்தார்.



அப்பாஸ் அராக்சி இன்று தெஹ்ரானில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களிடம் பேசினார். நாட்டில் இணையம் துண்டிக்கப்பட்டிருந்தபோதிலும், செயல்பட அனுமதிக்கப்பட்ட கத்தார் நிதியுதவி பெறும் அல்ஜசீரா செயற்கைக்கோள் செய்தி நிறுவனம் அராக்சியின் கருத்துகளை ஒளிபரப்பியது.

ஈரான் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் நாணய மதிப்பு வீழ்ச்சி ஆகியவற்றுக்கு அந்நாட்டில் கடந்த சில வாரங்களாக போராட்டம் நடந்து வருகிறது. இந்தப் போராட்டத்தின் காரணமாக அந்நாட்டில் 490 போராட்டக்காரர்கள் மற்றும் 48 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்துள்ளதாகவும், 10,600-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பான ஹெச்ஆர்ஏஎன்ஏ (HRANA) தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இப்பிரச்சினையைத் தூண்டிவிடுவதாக ஈரான் அரசு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், "அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் வழிநடத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை" கண்டித்து இன்று (திங்கட்கிழமை) நாடு தழுவிய பேரணிக்கு அழைப்பு விடுத்ததாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% உடனடி வரி

**அமெரிக்கா,ஜன.14:**

உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயல்படும் நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் கடுமையான வரிகளை விதித்து வருகிறார்.

ரஷியா - உக்ரைன் இடையேயான போருக்கு இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் கச்சா எண்ணெய் வாங்குவதே காரணம் எனக் கூறிய அவர் இந்தியாவுக்கு முதலில் 25 சதவிகித வரியும் பின்னர், கூடுதல் 25 சதவிகித வரிவிதித்தார். டிரம்ப்பின் நடவடிக்கையை மீறிய இந்தியா, சீனாவுக்கு கூடுதலாக 500 சதவிகித வரி விதிப்பு குறித்த மசோதாவுக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த நிலையில், ஈரான் தொடரும் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த அரசுக்கு உள்ள அழுத்தம் அதிகரித்துள்ளது.



அமெரிக்காவுக்கு எதிராகப் பேசிவந்த வெனிசுவேலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை அந்த நாட்டுக்குள்ளேயே நுழைந்து அமெரிக்க ராணுவத்தினர் கைது செய்த சம்பவம் ஈரான் போராட்டக்காரர்களுக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளது.

இந்தச் சூழலில், போராட்டக்காரர்கள் மீது ஈரான் அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைக்கு தண்டனையாக அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்த நிலையில், ஈரானுடன் வர்த்தகம் செய்யும் அனைத்து நாடுகளுக்கும் 25 சதவிகித உடனடி வரிவிதித்து உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அதிபர் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் பதிவு ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

அந்தப் பதிவில், "ஈரானின் இஸ்லாமிய குடியரசுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய உடனடியாக 25 சதவிகித வரிவிதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக அமலுக்கு வந்த இந்த வரிவிதிப்பானது இறுதியானது மற்றும் உறுதியானது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிவிதிப்பால், இந்தியா, துருக்கி, சீனா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் கடுமையாகப் பாதிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மாணவர்கள் தங்கள் அறிவையும் திறனையும் நாட்டுக்கு சேவை செய்ய அர்ப்பணிக்க வேண்டும்: சிபிஆர்

**புதுடெல்லி,ஜன.14:**

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுச் செல்லும் மாணவர்கள் தங்கள் அறிவையும், திறனையும், நாட்டுக்கு சேவை செய்வதில் அர்ப்பணிக்க வேண்டும். கல்வி என்பது வெறும் பட்டங்களை வழங்குவதோடு நின்றுவிடாமல், நற்பண்புகளை வளர்ப்பதாகவும், அறிவை வலுப்படுத்துவதாகவும், ஒவ்வொரு தனிமனிதனும் தன் சொந்தக் காலில் நிற்பதற்குத் தேவையான தன்னம்பிக்கையைத் தருவதாகவும் அமைய வேண்டும்.



கல்வி, முறையான பயிற்சி மட்டுமே, 2047-ல் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற பிரதமர் மோடியின் தொலைநோக்கை இளைஞர்கள் நனவாக்க உதவும். நாலந்தா, தட்சசீலம் போன்ற கல்வி மையங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, கவுடில்லியரின் அர்த்த சாஸ்திரம், திருவள்ளுவரின் திருக்குறள் போன்றவை கற்றலைச் சமூக மற்றும் அறநெறி வாழ்வின் மையமாக முன்னிறுத்தி வந்துள்ளன. உண்மையான கல்வி என்பது பட்டம் பெறுவது மட்டும் அல்ல, அது நம் நடத்தையையும் குணத்தையும் செம்மைப்படுத்துகிறது.

விவாதம், ஆலோசனை, முரண்பாடுகள் ஆகியவை ஆரோக்கியமான ஜனநாயகத்தின் முக்கியமான அம்சங்கள். இவை இறுதியில் ஒரு முடிவுக்கு வழி வகுக்க வேண்டும். முடிவெடுத்தவுடன், அவற்றை அமல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த முடியும்.

உண்மையை அறிவதில் நேர்மை, சமத்துவமின்மையைக் குறைக்க சமூக உள்ளடக்கம் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கான தீவிர பங்களிப்பு ஆகிய மூன்று முக்கிய பொறுப்புகளை பட்டதாரிகள் பின்பற்ற வேண்டும். மாணவர்கள் எப்போதும் பெற்றோரையும், ஆசிரியர்களையும் மதிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்ரீபெருமாள் சேவை



காஞ்சி ஸ்ரீவரதன் திருப்பாவை பாசுரதுடன் சிற்றம் ஸ்ரீபெருமாள் சேவை.

## ஸ்ரீவரமங்கை தாயார் கணு உற்சவம்



வானமாமலை ஸ்ரீவரமங்கை தாயார் கணு உற்சவம் மூன்றாம் திருநாள் புறப்பாடு.

## ஆண்டாள் நீராட்ட உற்சவம்



ஸ்ரீ வீரராகவ சுவாமி தேவஸ்தானம் திருவள்ளூர் ஆண்டாள் நீராட்ட உற்சவம் இரண்டாம் நாள் ஆண்டாள் புறப்பாடு

## ஸ்ரீ ஆண்டாள் நீராட்டு உத்ஸவம்-8



ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட புறப்பாடு பெரியமாடவீதி @ Triplicane partha sarathi perumal Kovil Chennai

# தேசிய இளைஞர் தின விழா



**தஞ்சாவூர், ஜன.14:**

தஞ்சாவூர் மாவட்டம் பூண்டி அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் நேற்று முன்தினம் (12.01.2026) தேசிய இளைஞர் தின விழா காலை 10.30 மணியளவில் முனைவர் V.மணிராஜ் முதல்வர்(பொறுப்பு) அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

சுவாமி விவேகானந்தர் யார்? ஒரு வாசிப்பு என சுவாமி விவேகானந்தர் பற்றி மாணவர்கள் ஒரு கருத்துரை வழங்க, ஸ்ரீமான் கல்விக்காவலர் து.கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் (செயலர் & தாளாளர் அ.வீ.வா.நி ஸ்ரீபுட்பம் கல்லூரி) தன்னாட்சி பூண்டி வாழ்த்துரை வழங்க, சுவாமி விமூர்த்தானந்தர் அவர்கள் (தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், தஞ்சாவூர்) ஆசியுரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து உறுதிமொழி ஏற்பும், முனைவர் M.மதன் மோகன் அவர்கள் துணை முதல்வர் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை பூண்டி ஸ்ரீ புஷ்பம் கல்லூரி மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மடம், தஞ்சாவூர் செய்து இருந்தனர்

**செய்தி:தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

# சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பொங்கல் விழா..!



**இராமநாதபுரம், ஜன.14:**

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்களோடு பெற்றோர்களும் இணைந்து பொங்கல் வைத்து மகிழ்ந்தனர்.

தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. பள்ளியின் முன்பு மூன்று கரும்புகள் நட்டி நடுவில் அடுப்பு கூட்டி பானை வைத்து மாணவர்களும் பெற்றோர்களும் பொங்கலிட்டனர்.

அரிசி போடும் போது பாரம்பரிய முறைப்படி குலவையிட்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதனைப் போல் பொங்கல் பொங்கிவரும்போது பொங்கலோ பொங்கல் என மகிழ்ச்சி ஒலியெழுப்பி மகிழ்ந்தனர். பின்னர் உழவுத் தொழிலுக்கு மூலமான சூரியனுக்கு பொங்கல் படைத்து வழிபட்டனர். அனைவருக்கும பொங்கலோடு கரும்பும் வழங்கப்பட்டது.

விழாவில் மாணவர்கள், பெற்றோர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இடைநிலை ஆசிரியை அ.தாஹிரா நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

# திருப்புவனம் திமுக நிர்வாகிகள் கூட்டம்





**மானாமதுரை, ஜன .14:**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மேற்கு.தெற்கு ஒன்றியம். மற்றும் பேரூர் திமுக செயற்குழு கூட்டம் அவைத் தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் வசந்தி சேங்கை மாறன். சுப்பிரமணியன். பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்களை மாவட்ட கழக துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன் வாசித்தார்.

தீர்மானம். தமிழக மக்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு ரூபாய் 3000 வழங்கிய தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கு திருப்புவனம் ஒன்றிய கழகத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து கிளைக் கழகங்களில்தமிழர் திருநாளாம் தைத் திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா நடத்துவது .

விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதான தீர்மானிக்கப் படுகிறது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள். பேரூராட்சித் துணைத் தலைவர் ரகமத்துல்லா கான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. மாவட்ட பிரதிநிதி ஈஸ்வரன். பாலகிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் சக்திமுருகன், ஒன்றிய துணைச் செயலாளர் ராமு.அன்னமுத்துஇளங்கோவன், நகரத் துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரம், மீனவரணி அண்ணாமலை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுகரசு, நகர இளைஞரணி அமைப்பாளர் கண்ணன், பேரூராட்சி கவுன்சிலர்கள், வேல்பாண்டி, மாரிதாசன். கலை இலக்கியப் பகுத்தறிவு நகர அமைப்பாளர் முத்துக்குமார். சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஆறுமுகம், இளைஞரணி துணை அமைப்பாளஞர்கள், காளிதாஸ், திருப்பதி, வேல்முருகன், நித்தியானந்தம் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பொங்கல் வாழ்த்து



**சென்னை, ஜன.14:**

அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

உலகெங்கும் வாழும் தமிழர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இனிய பொங்கல் திருநாளில், அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் அனைவரும் பொங்கல் திருநாளின் முதல் பண்டிகையாக, போகிப் பண்டிகை தொடங்கி, தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் (உழவர் திருநாள்) என 4 நாட்கள் விமரிசையாகக் கொண்டாடி மகிழ்வார்கள்.

இந்த இனிய பொங்கல் திருநாளில், மக்கள் தங்களது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக, வீட்டினுள்ளும், வாசலிலும் வண்ணக் கோலங்களினால் அலங்கரித்து, கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நெற்கதிர், கரும்பு, வாழை, இஞ்சி, மஞ்சள் உள்ளிட்ட விளை பொருட்களை வைத்து, புதுப்பானையில் அரிசியிட்டு, அது பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என்று உற்சாகக் குரலெழுப்பி இறைவனுக்குப் படைத்து வழிபடுவதோடு, தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளை அலங்கரித்து, பொங்கல் மற்றும் வாழைப் பழங்கள் உள்ளிட்ட உணவுகளை வழங்கி, தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

உழவர்கள், தங்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களில் பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில், தமிழக மக்கள் அனைவரும் எல்லா நலமும், வளமும் பெற்று சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது தூய வழியில் மனதார வாழ்த்தி, மக்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சமத்துவ பொங்கல் விழா




**மதுரை, ஜன.14:**

மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல் கே பி நகர் அரசு நடுநிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியை விஜயலட்சுமி முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மதுரை கிழக்கு வட்டார கல்வி அலுவலர் மணிமாறன் கலந்து கொண்டு புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை குழந்தைகளுக்கு தெரிவித்தார்.

பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. கோலப்போட்டி நடைபெற்றது. மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அனைத்து குழந்தைகளுக்கும் இனிப்பு பொங்கல், கரும்பு, தேங்காய், வாழைப்பழம் வழங்கப்பட்டது. மகிழ்முற்றம் மாணவி தலைவர் சாதனா நன்றி கூறினார்.

# தஞ்சை மீனாட்சி மருத்துவமனையில் ஆரோக்கிய பொங்கல் விழா




**தஞ்சாவூர்,ஜன.14:**

தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை சார்பாக ஆரோக்கிய பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. முன்னதாக புது மண் பானையில் பச்சரிசி பொங்கல் மற்றும் சக்கரை பொங்கல் வைத்து சூரியனை வழிபட்டனர்.

பசு மற்றும் கன்றுடன் கோபூஜை வழிபாடு செய்யப்பட்டது விழாவில் மருத்துவமனையின் பொது மேலாளர் சிவகுமார், மக்கள் தொடர்பு அதிகாரி மணிவாசகம் புறநோயாளி பிரிவு மேலாளர் ரமணி வாசகம். மருத்துவர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 17-ந்தேதி தொடங்கி வைக்கிறார்




**சென்னை, ஜன.14:**

தமிழர் திருநாளாம்பொங்கல் பண்டிகையையொட்டி மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகள் கோலாகலமாக நடைபெறுவது வழக்கம்.

அதே போல் வருகிற பொங்கல் பண்டிகையை யொட்டி உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி வருகிற 17-ந்தேதி (சனிக்கிழமை) நடைபெறுகிறது.

இதற்காக பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று தொடங்கி வைக்க உள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. தொண்டர்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்து எழுதி உள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:-

தமிழ் இனத்தின் பண்பாட்டுப் பெருமைகளில் ஒன்றான, ஜல்லிக்கட்டு எனப்படும் ஏறுதழுவுதல் நிகழ்வைப் பார்ப்பதற்கு உங்களில் ஒருவனான நான், உங்களால் தமிழ்நாட்டு முதலமைச்சரான நான் ஜனவரி 17-ம் நாள் அதாவது, தை மாதம் 3-ம் நாள் மதுரை அலங்காநல்லூருக்கு நேரில் செல்கிறேன். அந்த அலங்காநல்லூரில் உலகத்தரத்திலான ஏறுதழுவுதல் அரங்கத்தை நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அவரது நூற்றாண்டு நினைவாக அமைத்துத் திறந்ததும் நமது திராவிட மாடல் அரசுதான்.

கழக உடன்பிறப்புகளுக்கும், தமிழர்கள் அனைவருக்கும் இனிய தமிழர் திருநாள் - தைப்பொங்கல் வாழ்த்துகள்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# திருச்செந்தூர் கோவிலில் நாளை அதிகாலை 1 மணிக்கு நடை திறப்பு

**திருச்செந்தூர், ஜன.14:**

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாளை மறுநாள் தைப்பொங்கல் சிறப்பு வழிபாடு செய்வதற்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டம், கூட்டமாக வந்தவாறு உள்ளனர்.



தைப்பொங்கலைமுன்னிட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாளை (15-ந்தேதி) கோவில் நடை அதிகாலை 1 மணிக்கு திறக்கப்படுகிறது.

1.30 மணிக்கு விஸ்வரூபம், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.

# கவிதை அரங்கம்!



நம்பிக்கை என்பது
சூரியனை
போல அதை நோக்கி
நாம் செல்லச் செல்ல
மனச்சுமை என்ற நிழல்
நம் பின்னால் போய்விடும்

ஊதி விடப்பட்ட பலூன்
உயரத்தில் தான் பறக்கும்
உதறித்தள்ளப்பட்ட நீயும்
உயரத்தில் பற

நம்மால் நேற்றை சரிசெய்ய
முடியாது

ஆனால் நாளையை
உருவாக்க முடியும்

விழுந்த அடிகளை
படிகளாக நினைத்தால்
எந்த உயரத்தையும்
தொட்டு விடலாம்

எண்ணம் உறுதியாக
இருந்தால் எண்ணியபடி
உயரலாம் நமது எண்ணம்
தான் நம்முடைய
எதிர்காலத்தை
உருவாக்குகிறது

## வாழ்க்கை தத்துவம்...



தண்ணீரை போல்
இருங்கள்
அதனால்
ஒதுங்கி செல்லவும் முடியும்
உடைத்தெறியவும் முடியும்

இருந்தால் உறவு
பிரிந்தால் நினைவு
அம்புட்டு தான்
இந்த வாழ்க்கை

தேடி அலைந்து
கொண்டே இரு
வேண்டியது கிடைக்கும் வரை
அது உன் அருகில் இருந்தால்
அதிர்ஷ்டம்
தூரத்தில் இருந்தால்
நம்பிக்கை
கிடைக்காமல் போனால்
அனுபவம்

# "கடைசிக் கணக்கு"



தெற்குத் தெருவில் மாடசாமியின் வீடு மட்டும் எப்போதும் திறந்தே இருக்கும். வாசலுக்குக் கதவு இருந்தது, ஆனால் மாடச்சாமியின் மனசுக்குக் கதவு இல்லை. அதற்கு பதில் ஈரங் கொண்ட நெஞ்சம் இருந்தது.

தன்னிடம் கஷ்டமென்று சொல்லி யார் வந்து கடன் கேட்டாலும் கேள்வி கேட்காமல் கொடுப்பான். அதற்கு கணக்குக்கூட வைத்துக் கொள்ள மாட்டான்.

ஒரு காலை நேரத்தில் கந்தன் வந்து நின்றான். கண்களில் கண்ணீர், "பத்தாயிரம் போதும் அண்ணே…" குரல் தட்டுத் தடுமாறியது.

மாடசாமி ஏதுவும் கேட்கவில்லை. பையிலிருந்து பணம் எடுத்தான்.

"உன் கஷ்டமெல்லாம் தீர்ந்த பிறகு திருப்பிக் குடு போதும்" என்றான் கந்தன் கையில் திணித்தபடி.

அந்தக் கடன் விவகாரம் அந்த இரண்டு உயிர்களுக்குள் மட்டுமே புதைந்திருந்தது.

ஒரு காலை நேரத்தில் மாடசாமி கண்களை மூடிக் கொண்டான்.

தெற்குத் தெரு முழுக்க அன்று சோகம் பூசிக் கொண்டது.

ஆனால், சாவு வீட்டில் ஒரு விசித்திரம் நடந்தேறியது. அவரிடம் கடன் வாங்கியவர்கள் வரிசை கட்டி வந்து தாங்கள் தர வேண்டிய தொகையை வைத்துச் சென்றார்கள்.

"இனி இவரோட காசு நம்ம கையில இருக்கக் கூடாது" என்று சொல்லிக் கொண்டே.

ஆனால், கந்தன் மட்டும் அந்த வரிசையில் இல்லை.

அவன் மனசுக்குள் ஒரு சிறிய சத்தம். "நான் கடன் வாங்கியது என்னையும் மாடசாமியையும் தவிர வேற யாருக்கும் தெரியாது… இது எழுதப்படாத கடன் வேற… எப்படியும் செத்தவன் எழுந்து வந்து கேட்க மாட்டான்…அதனால நாமளே அமுக்கிட வேண்டியதுதான்!"

மனச்சாட்சியை மண்ணோடு மண்ணாக மாடசாமியோடு அடக்கம் செய்தான்.

சுடுகாட்டுச் சடங்குகள் முடிந்ததும் மண் சமமானது. அழுகைகளும் நின்றன.

கந்தன் ஒரு வித திருப்தியுடன் திரும்பி நடந்தான். அப்போதுதான் அது நடந்தது. கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடி வந்தது மாடசாமியின் மாடு.

கண்களில் பசி இல்லை. பயம் இல்லை. ஒரே இலக்கு கடைசிக் கணக்கு.

அடுத்த நொடியில் கந்தன் தரையில். வயிற்றில் கொம்பு. ரத்தச்சகதி.

மருத்துவமனையில் தீவிர சிகிச்சை மேற்கொண்ட பின் உயிர் தப்பினான் கந்தன்.

பில் கையில் வந்தது..சரியாக ரூபாய் 10,001/- ஒரு ரூபாய் வட்டிக்காக.

கந்தன்.படுக்கையில் கிடந்தபடி மாடசாமியை நினைத்தான்.

""உன் கஷ்டமெல்லாம் தீர்ந்த பிறகு திருப்பிக் குடு போதும்" என்ற மாடசாமியின் குரல் இப்போது ரத்தத்தோடு பேசிக் கொண்டிருந்தது.

சில கடன்களுக்கு கணக்கு எழுத மனிதன் வேண்டாம்… காலமே போதும்.

(முற்றும்)

முகில் தினகரன்
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*"எம்பிளாய்மெண்ட் ஆபிசிலே நீ பதியறதுக்கு, உன்னோட அப்பா, தாத்தாவையும் கூட்டிட்டு வந்திருக்கியே! ஏன்?"*

*"அப்பாவுக்குப் புதுப்பிக்கணும்... எங்க தாத்தாவுக்கு முதல் இண்டர்வியூ வந்திருக்கு!"*



# தினம் ஒரு சமையல்



## சிக்கன் நூடுல்ஸ்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சிக்கன் | - 100 கிராம் |
| லூஸ் நூடுல்ஸ் | - 1 பாக்கெட் |
| வெங்காயம் | - 100 கிராம் |
| பச்சை மிளகாய் | - 2 |
| மிளகுத்தூள் | - அரை தேக்கரண்டி |
| சர்க்கரை | - 1/4 தேக்கரண்டி |
| சோயா சாஸ் | - 1 தேக்கரண்டி |
| தக்காளி சாஸ் | - 1 தேக்கரண்டி |
| உப்பு, எண்ணெய் | - போதுமான அளவு |

செய்முறை:



1. சிக்கனை நன்றாக சுத்தம் செய்து, வேக வைத்து தனியாக எடுத்துக் கொள்ளவும். அகலமான கடாயில் நீர் ஊற்றி நூடுல்சை வேக வைத்து தனியாக எடுத்துக் கொள்ளவும்.
2. ஒரு கடாயில் எண்ணை ஊற்றி காய்ந்ததும், பொடியாக நறுக்கிய வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை சேர்த்து நன்றாக வதக்கவும். பின் வேக வைத்த சிக்கன் மற்றும் நூடுல்ஸை சேர்க்கவும்.
3. சோயா சாஸ், தக்காளி சாஸ், மிளகுத் தூள் போதுமான அளவு உப்பு சேர்த்து கடைசியில் சர்க்கரை சேர்த்து கிளறி இறக்கவும்.

## நெருஞ்சி பயன்கள்



வணக்கம் நண்பர்களே. இன்றைய ஆரோக்கியம் பதிவில் நெருஞ்சில் முள் பொடியின் நன்மைகள் பற்றி தெரிந்து கொள்ளாலாம் வாங்க. நெருஞ்சில் செடி என்பது சாலையோரங்களிலும் வயல்வெளியில் படர்ந்து வளர்ந்து இருக்கும் மூலிகை செடி ஆகும். இச்செடியில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் உள்ளது. இதில் நம் உடலிற்கு தேவையான இன்றையமையாத சத்துக்களான இரும்புச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ் போன்றவை உள்ளது.

நெருஞ்சில் செடி மூன்று வகைப்படும். அதாவது, சிறு நெருஞ்சில், யானை நெருஞ்சில் (பெருநெருஞ்சில்) மற்றும் செப்பு நெருஞ்சில் என மூன்று வகைகளில் உள்ளது. இச்செடி முட்செடி என்றும் அழைக்கப்படுகிறது. இதன் மேற்பகுதியில் சிறு சிறு முற்கள் காணப்படும். இச்செடியின் இலை, வேர்,காய், பூ, தண்டு, மற்றும் முள் ஆகிய அனைத்தும் மருத்துவகுணம் மிக்கவை. இந்த இலையில் அதிக அளவு இரும்புசத்து, கால்சியம், பாஸ்பரஸ் போன்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளன. ஆகையால், இவற்றின் நன்மைகள் பற்றி இப்பதிவின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

நெருஞ்சி முள்ளை ஒரு குறிப்பிட்ட அளவு சேகரித்து அதனை பாலுடன் சேர்த்து வேகவைத்து எடுத்து கொள்ளவும். அதன் பிறகு, அதனை நன்கு உலர்த்தி பொடியாக தயாரித்து, பாலுடன் 1/2 ஸ்பூன் கலந்து தினமும் காலை மாலை என இருவேலையும் அருந்தி வருவதன் மூலம், ஆண்மை பெருகும். நெருஞ்சில் ஆண்களுக்கு ஏற்படும் சிறுநீர் கடுப்பு, விதைப்பை வீக்கம் போன்ற பல பிரச்சனைகளுக்கு தீர்வாக உள்ளது.

சிறுநீரக கல் கரைய

யானை நெருஞ்சில் காயை காயவைத்து உலர்த்தி கஷாயம் போல் செய்து தினமும் குடித்து வந்தால் சிறுநீரக கல் நீங்கும். நெருஞ்சில் அனைத்தையும் அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து எருமை தயிரில் கலந்து காலை ஒரு வேலை மட்டும் குடித்துவருவதன் மூலம் சிறுநீரகம் சம்மந்தபதப்பட்ட அனைத்து பிரச்சனைகளை நீங்கும்.

வெள்ளைப்படுதல் நீங்க:

நெருஞ்சில் இலைகளை இடித்து பொடி செய்து காலை மாலை என இரண்டு வேலையும் பாலில் சேர்த்து, சிறிதளவு நாட்டுச்சர்க்கரை கலந்து குடித்து வர வெள்ளைப்படுதல் நீங்கும். மேலும், வயிற்று சம்மந்தப்பட்ட பிரச்சனைகளும் நீங்கும்.

உடல் உஷ்ணம் குறைய

நெருஞ்சில் செடி மற்றும் அருகம்புல் சிறிதளவு சேர்த்து, தண்ணீர் விட்டு காய்ச்சி கஷாயம் போல் குடித்து வர உடல் உஷ்ணம் நீங்கும். மேலும், உடல் உஷ்ணத்தால் உண்டாகும் கண் எரிச்சல், கண் சூடு மற்றும் வயிற்று வலி போன்றவை குணமாகும்.

மஞ்சள் காமாலை:

மஞ்சள் காமாலை என்றாலே அனைவருக்கும் கீழாநெல்லி செடிதான் பயன்படுத்துவது என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் நெருஞ்சில் செடியும் மஞ்சள் காமாலைக்கு மருந்தாக பயன்படுத்துகிறார்கள். கீழாநெல்லி வேரும் நெருஞ்சில் வேரும் சமஅளவு எடுத்து பொடியாக அரைத்து மோர் அல்லது இளநீரில் சேர்த்து குடித்து வந்தால் மஞ்சள் காமாலை பிரச்சனை குணமாகும்.

# சினிமா

## லோகேஷ் கனகராஜ் அடுத்த பட சம்பளம்! புது உச்சம்.. எத்தனை கோடி பாருங்க!



இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தற்போது கூலி படத்திற்கு பிறகு எந்த புது படத்தையும் அறிவிக்காமல் இருக்கிறார். அடுத்து அவர் ஹீரோவாக DC படத்தில் நடித்து வருகிறார். அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் அந்த படம் உருவாகி வருகிறது.

இந்நிலையில் தெலுங்கில் டாப் ஹீரோவாக இருக்கும் அல்லு அர்ஜுன் உடன் லோகேஷ் அடுத்து கூட்டணி சேர போகிறார்.

இந்த படத்திற்காக லோகேஷ் கனகராஜுக்கு 75 கோடி ரூபாய் சம்பளமாக தரப்படுவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

தற்போது அல்லு அர்ஜுனை இயக்கி வரும் அட்லீக்கு 100 கோடி ரூபாய் சம்பளமாக தரப்படுவது குறிப்பிடத்தக்கது.



மாளவிகா பிரபல இதழின் அட்டைப்படத்திற்கு மிகவும் கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

பல விதமான் ஹாட் உடைகளில் அவர் இருகும் அந்த ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ பாருங்க.

## பராசக்திக்கு வெளிநாட்டில் குவியும் வசூல்.. எவ்வளவு தெரியுமா? அமரன் படத்தை விட அதிகம் தான்



சிவகார்த்திகேயனின் பராசக்தி படம் கடந்த ஜனவரி 10ம் தேதி ரிலீஸ் ஆகி இருந்தது. ஹிந்தி எதிர்ப்பு போராட்டதற்கு மையப்படுத்தி எடுக்கப்பட்ட இந்த படமும் ஜனநாயகன் போல சென்சாரில் பிரச்சனைகளை சந்தித்தது.

ஆனால் பல வசனங்களை மியூட் செய்யவும், சில காட்சிகளை நீக்கவும் படத்தின் தரப்பு ஒப்புக்கொண்டதால் சென்சார் சான்றிதழ் வழங்கப்பட்டது.

முதல் நாளில் உலக அளவில் 27 கோடி ரூபாய் பராசக்தி வசூலித்து இருக்கிறது.

இதில் வெளிநாட்டில் வந்த வசூல் பெரிய பங்கு ஆகும்.

பராசக்தி வெளிநாட்டில் மட்டும் 12.8 கோடி ரூபாய் வசூல் வந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது சிவகார்த்திகேயனின் அமரன் பட வசூலை விட அதிகம்.

குறிப்பாக UKவில் முதல் நாளில் மட்டும் £87,842 வசூல் வந்திருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வந்திருக்கிறது. இது இந்திய ரூபாய் மதிப்பில் 1.06 கோடி ரூபாய் ஆகும்.

# ஆருத்ரா தரிசனம்!



ஆருத்ரா தரிசனம் என்றால் என்ன?

பிறப்பே எடுக்காத ( ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளுக்கு) சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை என்கிறார்களே எப்படி? தமிழ் மொழியில் திருவாதிரை என்று கூறப்படும் நட்சத்திரத்திற்கு வடமொழியில் ஆர்த்ரா என்று பெயர். இதுவே ஆருத்ரா எனப் படுகிறது. மார்கழி மாத திருவாதிரை நட்சத்திர நாளில், எல்லா சிவாலயங்களில் ஆருத்ரா தரிசனம் சிறப்பாக நடைபெறும். பிறப்பே எடுக்காத சிவபெருமானுக்கு பிறந்த நட்சத்திரம் திருவாதிரை என்கிறார்களே? பிறவா யாக்கைப் பெற்றோன் பெரியோன் என்று சங்க இலக்கியமான சிலப்பதிகாரம் சிவபெருமானைக் குறிக்கிறது. சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனதுபற்றி புராணச் செய்திகள் உள்ளன. சேந்தனார் வீட்டுக்கு களி யுண்ண நடராஜப் பெருமான் வந்த அந்த தினம்,ஒரு மார்கழி மாத திருவாதிரை நாள் இதை உணர்த்தும் வகையில், இன்றும் ஆதிரை நாளில் தில்லை நடராஜப் பெருமானுக்கு களி படைக்கப்படுகிறது. இதனால் சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனது. ஒரு காலத்தில், திரேதாயுகா என்ற பெண் பார்வதி தேவியின் தீவிர பக்தையாக இருந்தாள். திரேதாயுகாவுக்கு திருமணம் நடந்தது. அக்காலத்தில் திருமணமான நான்காவது நாளில்தான் சாந்தி முகூர்த்தம் நடக்கும். ஆனால் திருமணமான மூன்றாவது நாளிலேயே திரேதாயுகாவின் கணவன் இறந்துவிட்டான். திரேதாயுகா அலறித் துடித்து பார்வதிதேவியே உன் பக்தையான என்னை இப்படி சோதிக்கலாமா, உன்னை இவ்வளவு காலம் வணங்கி என்ன பயன் என்று கூறிக்கதறி அழுதாள். அப்போது கயிலாயத்தில் சிவன் அருகில் அமர்ந்திருந்த பார்வதி, திரேதாயுகாவின் அலறலைக் கேட்டு அவள் கணவனுக்கு உயிர்ப் பிச்சையளிக்க சபதம் செய்தாள். அவளது சபதத்தைக் கேட்டு அதிர்ந்துபோன சிவன் உடனே எமலோகத்தை ஒரு பார்வை பார்த்தார். இதைக் கண்டு பதறிப்போன எமன் திரேதாயுகாவின் கணவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார். அதன்பின் பார்வதியும் பரமசிவனும் திரேதாயுகாவுக்கும் அவள் கணவனுக்கும் தரிசனகாட்சி கொடுத்து ஆசீர்வதித்தார்கள்.இந்த நிகழ்ச்சி ஒரு மார்கழி மாத திருவாதிரை நட்சத்திர நாளில் நடந்தது. இந்த தரிசனத்துக்கு ஆருத்ரா தரிசனம்* என்று பெயர் ஏற்பட்டது. சேந்தனாருக்கும் திரேதாயுகாவுக்கும் நேரில் தோன்றி தரிசனம் தந்த அந்த திருவாதிரை நட்சத்திர நாளையே சிவபெருமானாரின் நட்சத்திரமாக அதாவது ஆருத்ரா தரிசனமாக கொண்டாடப்படுகிறது. ஆருத்ரா தரிசனம் பற்றி தெரிந்து கொள்வோம்! சிவபெருமான் நெருப்பு உருவமாக தன்னை வெளிப்படுத்திக் காட்டியது சிவராத்திரி நன்னாள். சுவாமி தான் இப்பூமியில் ஆவிர்பரித்து நின்ற (தோற்றுவித்த) நாள் ஆருத்ரா நன்னாள். சிவராத்திரியன்று அவரை வழிபட்டால் பலன். ஆருத்ராவன்று தரிசித்தாலே பலன் ஆகும்.

திருச்சிற்றம்பலம்!



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி.

# தினம் ஒரு தலைவர்கள்: சரோஜினி நாயுடு வரலாறு

சரோஜினி நாயுடு அல்லது சரோஜினி சட்டோபத்யாயா (பிப்ரவரி 13,1879, ஐதராபாத் - மார்ச் 2,1949, லக்னோ) இவர் பாரத்திய கோகிலா (இந்தியாவின் நைட்டிங்கேல்) என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஒரு பிரபலமான சிறுமுது அறிஞர், கவிஞர், எழுத்தாளர் , சுதந்திரப் போராளி மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது பெண் தலைவரும்[ உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுனரும் ஆவார். அவரது பிறந்த நாள் இந்தியாவில் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இளமைக் காலம்

சரோஜினி சட்டோபாத்தியாயா, பின்னாளில் சரோஜினி நாயுடு, இந்தியாவின் ஹைதாராபாத் மாநிலத்தில் ஒரு வங்காள குலின் பிராமணக் குடும்பத்தில் மூத்த மகளாக 13 பிப்ரவரி 1879 அன்று பிறந்தார். இவர் இவரது குடும்பத்தின் 8 குழந்தைகளில் மூத்தவராவார். இவரது தந்தை விஞ்ஞானியும் தத்துவவியலாளரும் கல்வியாளராகவும் விளங்கிய அகோரநாத் சட்டோபத்யாயா. இவரது தாய் வரதா சுந்தரி ஒரு பெண் கவிஞர் ஆவார். இவரது தந்தை நிசாம் கல்லூரியின் நிறுவனர் ஆவார். மேலும் இவரது நண்பர் முல்லா அப்துல் காமுடன் இந்திய தேசிய காங்கிரசின் முதல் உறுப்பினராக விளங்கினார். அவர் பின்னர் அரசியலில் ஈடுபட்டதற்காக அவரது தலைமை ஆசிரியர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

## கல்வி

12 ஆவது வயதில் சரோஜினி நாயுடு அவரது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்றார். அவர் மாநில அளவில் முதலிடம் பெற்றார். 1891 முதல் 1894 வரை அவர் தன்னுடைய படிப்பில் சிறு இடைவெளி விட்டு, பல்வேறு தலைப்பிலான புத்தகங்களைப் படித்தார். 1895 ஆம் ஆண்டு, பதினாறு வயதில் முதன் முதலாக நிஜாம் அறக்கட்டளையின் உதவித்தொகை லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் கிர்டன் கல்லூரியில் மூலம் படிப்பதற்காக சென்றார். உருது, தெலுங்கு, ஆங்கிலம், பாரசீகம், பெங்காலி ஆகிய மொழிகளைப் பேச சரோஜினி நாயுடு கற்றுக்கொண்டார். அவருக்கு பிடித்தமான கவிஞர் பெர்சி பைஷ் ஷெல்லி ஆவார்.

## திருமணம்

இங்கிலாந்தில் தங்கியிருந்த போது தனது 17 வயதில் முத்யாலா கோவிந்தராஜுலு நாயுடு என்ற ஒரு பிராமணர் அல்லாத தொழில்ரீதியான ஒரு மருத்துவரை சந்தித்து, அவரைக் காதலித்து தனது 19வது வயதில் திருமணம் செய்து கொண்டார். 1898 ஆம் ஆண்டு சட்டப்படி சென்னையில் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சாதியிடை திருமணங்கள் அனுமதிக்கப்படாத காலகட்டத்தில் அவரை திருமணம் செய்து கொண்டார். அதற்கு முற்போக்கு சிந்தனையுள்ள அவரது தந்தையின் ஒப்புதலும் கிடைத்தது. அவரது திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. இவர்களது திருமணம் சென்னையில் டாக்டர் நஞ்சுண்டராவ்வின் 'சசி விலாஸ்' இல்லத்தில் நடைபெற்றது.அவர் சாதீயக் கட்டுப்பாடுகளின் தீவிர எதிர்ப்பு அலைகளைத் தாண்டி இத்திருமணத்தை நடத்தி வைத்தார். ஜெயசூர்யா, பத்மஜா, ரந்தீர், லீலாமணி என அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். பின்னர் அவரது மகள் பத்மஜா மேற்கு வங்காளத்தின் ஆளுனர் ஆனார்.

## அரசியல் வாழ்க்கை

மகாத்மா காந்தியுடன் சரோஜினி நாயுடு இந்திய சுதந்திர போராட்டம் 1905 ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார். 1903-17 காலகட்டத்தில் சரோஜினி அவர்கள் கோபால கிருஷ்ண



கோகலே, ரபீந்திரநாத் தாகூர், முகம்மது அலி ஜின்னா, அன்னி பெசண்ட், சி.பி.ராமஸ்வாமி ஐய்யர், மோகன்தாஸ் காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் அறிமுகத்தைப் பெற்றார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து தண்டி யாத்திரையில் ஈடுபட்டார். காந்தி, அப்பாஸ் தியாப்ஜி மற்றும் கஸ்தூரி பாய் காந்தி ஆகியோர் கைதுக்குப் பின் தர்சண சத்தியாகிரகத்தில் துடிப்புடன் பங்கேற்றார். 1915 முதல் 1918 ஆண்டுகளுக்கிடையில் அவர் இந்தியா முழுவதும் இளைய சமுதாயத்தினரின் நல்வாழ்வு, பணியாளர் நலன், பெண் கொடுமை மற்றும் தேசியப் பற்று குறித்து பல்வேறு சொற்பொழிவுகளை மேற்கொண்டார். ஜவகர்லால் நேருவை 1916 ஆம் ஆண்டு சந்தித்ததற்குப் பின் அவர் சம்பரன் இன்டிகோ பணியாளர்கள் பிரச்சினையைக் கையில் எடுத்தார். 1925 ஆம் ஆண்டில் அவர் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்கு தேந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவரே ஆவார்.



1919 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் ரௌலெட் சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன் வழியாக விழிப்புணர்வு ஆவணங்களை வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப்பட்டது; மோகன் தாஸ் காந்தி அவர்கள் எதிர்த்துப் போராட ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார், இதில் முதலில் இணைந்தவர் சரோஜினி நாயுடு ஆவார்.

ஜூலை 1919 ஆம் ஆண்டு சரோஜினி அவர்கள் இங்கிலாந்திற்கான ஹோம் ரூல் லீக்கின் தூதர் ஆனார். ஜூலை 1920 இல் அவர் இந்தியாவிற்கு திரும்பினார். ஆகஸ்ட் 1 அன்று மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். 1924 ஆம் ஆண்டு, கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரசில் பங்கேற்ற இரண்டு இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுள் ஒருவராக சரோஜினி அவர்கள் திகழ்ந்தார்.

அக்டோபர் 1928 ஆம் ஆண்டு நாயுடு நியூ யார்க்கிற்கு சென்றார். அங்கு நிலவிய ஆப்ரிக்க அமெரிக்க மற்றும் அமெரிக்க இந்திய இனப் பாகுபாடுகளைக் கண்டு கவலையுற்றார். அங்கிருந்து திரும்பிய பின்னர் காங்கிரஸ் காரிய கமிட்டியின் உறுப்பினரானார். ஜனவரி 26, 1930 இல் தேசிய காங்கிரஸ் பிரித்தானிய ஆட்சியிடமிருந்து சுதந்திரம் கோரியது. மே 5, அன்று மோகன் தாஸ் காந்தி கைது செய்யப்பட்டார். அதன் பின் சில நாட்களிலேயே நாயுடு அவர்களும் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். காந்தி அவர்களுடன் ஜனவரி 31, 1931 இல் அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். மோசமான உடல் நிலை காரணமாக நாயுடு உடனடியாகவும் காந்தி 1933 ஆம் ஆண்டும் விடுதலை செய்யப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு அவர் காந்திஜி மற்றும் பண்டிட் மாலவியாஜி ஆகியோருடன் இணைந்து வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார். அக்டோபர் 2, 1942 ஆம் ஆண்டு அவர் வெள்ளையனே வெளியேறு போராட்டம் காரணமாக கைது செய்யப்பட்டார். அவர் காந்திஜியுடன் 21 மாதங்கள் சிறையில் இருந்தார். மோகன் தாஸ் காந்தி அவர்களுடன் நாயுடு அவர்கள் ஒரு பாசமான உறவினைக் கொண்டிருந்தார். காந்தி அவரை செல்லமாக "மிக்கி மவுஸ்" என்று அழைப்பார். 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய உறவுகள் மாநாட்டில் நாயுடு பங்கேற்றார்.

## இந்தியாவின் முதல் பெண் ஆளுனர்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு அவர் யுனைட்டட் ப்ரொவின்சஸ் (தற்போது உத்தரப்பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது) ன் ஆளுநராக பதவியேற்றார். இதன் வழியாக இந்தியாவின் முதல் பெண் ஆளுநரானார். மார்ச் 2, 1949 அன்று மாரடைப்பால் அவர் மரணமடைந்தார்.

கவிதைத் துறை

அவரது முக்கிய பங்களிப்பும் ஆர்வமும் கவிதை துறையில் இருந்தது. சரோஜினி நாயுடு கவிதைத் துறைக்காக பல பாராட்டுகளைப் பெற்றுள்ளார். இவரது கவிதைகளில் அழகான வார்த்தைகள் இருக்கும், மேலும் அது பாடக் கூடிய வகையிலும் இருக்கும். 1905 ஆம் ஆண்டு அவரது முதல் பாடல்கள் தொகுப்பு தி கோல்டன் த்ரெஷோல்டு என்னும் பெயரில் வெளியிடப்பட்டது . மேலும் இரண்டு பகுதிகள் வெளியிடப்பட்டது: தி பேர்ட் ஆஃப் டைம் (1912) மற்றும் தி புரோக்கன் விங் (1917). 1918 ஆம் ஆண்டு, பீஸ்ட் ஆப் யூத் வெளியிடப்பட்டது. பின்னர் அவரது தி விஸார்டு மாஸ்க் மற்றும் எ டிரஷரி ஆஃப் போயம்ஸ் ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன. 1961 ஆம் ஆண்டு அவரது மகள் பத்மஜா தனது தாயின் வெளியிடப்படாத கவிதைகளை தி ஃபெதர் ஆஃப் டான் என்னும் தலைப்பில் வெளியிட்டார்.

# காமன்வெல்த் நாடுகளின் 28-வது சபாநாயகர்கள் மாநாடு; பிரதமர் மோடி நாளை துவக்கி வைக்கிறார்

**புதுடெல்லி, ஜன.14:**

காமன்வெல்த் நாடுகள் பங்கேற்கும் 28-வது சபாநாயகர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான மாநாடு நாளை தொடங்கி 16-ந்தேதி வரை 3 நாட்கள் நடைபெறும். இதனை முன்னிட்டு, டெல்லி செங்கோட்டையில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் நாளை நிலைக்குழு கூட்டம் ஒன்று நடைபெறும். இதில், அதன் உறுப்பினர்கள் கலந்து கொள்வதுடன் ஒலி, ஒலி நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதன்பின்னர், நாளை இரவு 7.30 மணியளவில் செங்கோட்டையில் அவர் விருந்தினர்களுக்கு இரவு விருந்து வழங்குவார்.

இதன்பின்னர் நாளை (15-ந்தேதி) நாடாளுமன்ற இல்ல வளாகத்தில் உள்ள சம்விதான் சதனின் மைய கூட்டரங்கில், பிரதமர் மோடி இந்த மாநாட்டை முறைப்படி துவக்கி வைக்கிறார். இதில், காமன்வெல்த் நாடுகளின் உறுப்பினர்கள் பங்கேற்பார்கள். இதுபற்றி சபாநாயகர் பிர்லா குறிப்பிடும்போது, நாடாளுமன்றத்தின் பகிரப்பட்ட மதிப்புகளை பற்றியும், ஜனநாயக நிர்வாகம் மற்றும் அமைப்பின் ஒத்துழைப்பு ஆகியவை பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்படும்.

இந்தியா தலைமையேற்று நடத்தும் இந்த மாநாட்டில் அதிக அளவில் உறுப்பினர்கள் பங்கேற்பர் என்றார்.

# பிஎஸ்எல்விசி62 ராக்கெட் தோல்வி: பசிப்பிக் கடலில் விழுந்த செயற்கைக்கோள்கள்

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன.14:**

இந்த ஆண்டின் முதல் ராக்கெட்டான பிஎஸ்எல்வி சி 62 நேற்று விண்ணில் செலுத்தப்பட்ட சில நிமிடங்களிலேயே தனது பாதையில் இருந்து விலகிச் சென்றதால் தோல்வியில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. இது இஸ்ரோ விஞ்ஞானிகளை மட்டுமின்றி, நாட்டு மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஆய்வு மைய முதல் ஏவுதளத்தில் இருந்து காலை 10.18 மணிக்கு 18 செயற்கைக்கோளுடன் புறப்பட்ட பிஎஸ்எல்வி சி62 ராக்கெட், 8-வது நிமிடத்தில் தனது பாதையில் இருந்து விலகிச் சென்றது.

பாதை விலகிய ராக்கெட்: இந்த ராக்கெட்டில் பிரதானமாக இஓஎஸ்-என் 1 (அன்விஷா) செயற்கைக்கோள் இருந்தது. மேலும், இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்கு சொந்தமான 17 சிறிய செயற்கைக்கோள்களும் இணைக்கப்பட்டிருந்தது.

பிரதான செயற்கைக்கோளான இஓஎஸ்-என்1 தரையில் இருந்து 505 கி.மீ. தொலைவில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், புறப்பட்ட 8-வது நிமிடத்தில் ராக்கெட்டின் 3-வது நிலையில் (பி.எஸ்.3) ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக உந்து விசை குறைந்ததால், குறிப்பிட்ட பாதையில் இருந்து ராக்கெட் விலகிச் சென்றது.

8 மாதங்களில் 2-வது தோல்வி: ராக்கெட்டில் இருந்த 18 செயற்கைக்கோள்களும் புவி ஈர்ப்பு பகுதிக்குள்ளேயே அப்போது இருந்ததால், அனைத்தும் பசிப்பிக் பெருங்கடலில் விழுந்து விட்டது. திட்டமும் தோல்வியில் முடிந்ததாக இஸ்ரோ தலைவர் நாராயணன் அறிவித்தார்.

ஏற்கனவே, கடந்த ஆண்டு ஏவப்பட்ட பிஎஸ்எல்வி சி61 ராக்கெட்டும் இதே பிரச்சினையால் தோல்வியில் முடிந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 8 மாதங்களில் பிஎஸ்எல்வி ராக்கெட்டின் 2-வது தோல்வி இதுவாகும். இது பிஎஸ்எல்வி ராக்கெட்டின் நம்பகத்தன்மை குறித்த சந்தேகங்களை ஏற்படுத்தி இருப்பதால் விண்வெளி பயண திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

# பெங்களூரு புறப்பட்ட இண்டிகோ விமானம் வாரணாசியில் அவசர அவசரமாக தரையிறக்கம்

**லக்னோ, ஜன.14:**

உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூரில் இருந்து கர்நாடகாவின் பெங்களூருவுக்கு நேற்று இரவு இண்டிகோ விமானம் புறப்பட்டது. விமானத்தில் 216 பேர் பயணித்தனர். விமானம் உத்தரபிரதேச வான்பரப்பில் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென விமானத்தில் பறவைகள் மோதின. இதனால், விமானத்தின் புகப்பு பகுதி சிறிது சேதமடைந்தது. இதையடுத்து, விமானத்தை உடனடியாக உத்தரபிரதேசத்தின் வாரணாசி விமான நிலையத்தில் விமானி தரையிறக்கினார். இந்த சம்பவத்தில் பயணிகள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இதையடுத்து மாற்று விமானம் மூலம் பயணிகள் பெங்களூரு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# ஓடும் காரில் பிளஸ் 2 மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை - அதிர்ச்சி சம்பவம்

**ஜெய்ப்பூர், ஜன.14:**

ராஜஸ்தான் மாநிலம் பிகனேர் மாவட்டம் நபசர் கிராமத்தை சேர்ந்த பிளஸ் 2 மாணவி கடந்த 6ம் தேதி காலை வீட்டில் இருந்து பள்ளிக்கு புறப்பட்டு சென்றார். கிராமத்தில் உள்ள சாலையில் நடந்து சென்றபோது மாணவியை பின் தொடர்ந்து கார் வந்துள்ளது. அப்போது திடீரென காரில் இருந்து இறங்கிய 2 இளைஞர்கள் மாணவியை காரில் கடத்திச்சென்றனர்.

பின்னர், ஓடும் காரில் வைத்து மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். கார் நபசர் கிராமத்திற்கு அருகே உள்ள கிராமத்தில் சென்றபோது மாணவி கூச்சலிட்டுள்ளார். அப்போது, கிராம மக்கள் காரை இடைமறித்து மாணவியை மீட்டனர். அதேவேளை, மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்கள் இருவரும் தப்பிச்சென்றனர். மேலும், மாணவியின் பெற்றோருக்கு உடனடியாக தகவல் கொடுத்தனர். அதேவேளை, பிளஸ் 2 மாணவியை காரில் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் நேற்று போலீசில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பிச்சென்ற 2 இளைஞர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# டெல்லியில் இருந்து சென்னை புறப்பட்டார் விஜய்: சிபிஐ மீண்டும் விசாரணைக்கு அழைக்க வாய்ப்பு



**புதுடெல்லி,ஜன.14:**

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த 2025 செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதுகுறித்து உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவும் அமைக்கப்பட்டது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், வழக்கு விசாரணையை சி.பி.ஐ.-க்கு மாற்றி கடந்த ஆண்டு அக்டோபர் 13-ஆம் தேதி உத்தரவிட்டது. மேலும் சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்க முன்னாள் நீதிபதி அஜய் ரத்தோகி தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவையும் நியமித்தது. கரூரில் பல கட்டங்களாக விசாரணை நடைபெற்று வரும் நிலையில், த.வெ.க. இரண்டாம் கட்ட தலைவர்கள் கடந்த மாத இறுதியில் மூன்று நாட்கள் டெல்லிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்களுடன் கரூர் மாவட்ட அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டது. இந்த நிலையில், கரூர் சம்பவத்தின் பெருங்கூட்டத்துக்கு காரணமான விஜய்யிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. அதிகாரிகள் முடிவு செய்து, ஜனவரி 12-ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. இதேபோல் போலீஸ் உயர் அதிகாரிகள் சிலருக்கும் சி.பி.ஐ. அதிகாரிகள் சம்மன் அனுப்பியிருந்தனர். சி.பி.ஐ. சம்மனை ஏற்று, டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் விஜய் ஆஜரானார். பலத்த எதிர்பார்ப்புக்கு இடையே மாலை 6.30 மணிக்கு விசாரணை முடிந்து விஜய் வெளியே வந்தார். அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. நேற்று விசாரணை முடிந்த பிறகு டெல்லியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தங்கிய விஜய், 13ம் தேதி காலை தனி விமானம் மூலம் சென்னை புறப்பட்டார். விஜய்யை 19-ஆம் தேதி மீண்டும் சி.பி.ஐ. விசாரணைக்கு அழைக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# 243 தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம்: சித்தராமையா பெருமிதம்

**கலபுரகி, ஜன.14:**

கர்நாடகாவின் கலபுரகி நகரில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்-மந்திரி சித்தராமையா, எதிர்க்கட்சிகள் அரசியலுக்காக பொய் பேசுகின்றன. உள்கட்டமைப்பு பணிகளுக்கு தேவையான நிதி அரசிடம் இல்லை என்று அவர்கள் எல்லா இடங்களிலும் தவறான தகவல்களை பரப்புகிறார்கள். ஜெவர்கி என்ற ஒரு தொகுதிக்கு ரூ.906 கோடி செலவிடப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று அப்படி அரசு திவாலாகி இருந்தால், இதற்கு சாத்தியமில்லை. இதுவரை ரூ.1.12 லட்சம் கோடிக்கும் கூடுதலாக செலவு செய்யப்பட்டு உள்ளது. தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகளின்படி, ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டிலேயே அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு உள்ளன என்று கூறினார்.

வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலேயே



அரசு செயல்படுகிறது. அதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த தேர்தலில், 592 வாக்குறுதிகளை காங்கிரஸ் கட்சி வழங்கியது. 243 வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளது. மீதமிருக்கிற வாக்குறுதிகளும் வருகிற நாட்களில் நிறைவேற்றப்படும் என்றார்.

அவர் தொடர்ந்து, கடந்த முறை எங்கள் அரசு ஆட்சியில் இருந்தபோது, நாங்கள் அளித்த 165 வாக்குறுதிகளில் 158 வாக்குறுதிகளை நிறைவேற்றினோம் என்றும் கூறினார்.

# கோழிக்கோட்டுக்கு சவுதி விமான சேவை அறிமுகம்



**கோழிக்கோடு, ஜன.14:**

சவுதி அரேபியா விமான நிறுவனமான சவுதியா ஏர்லைன்ஸ், இந்தியாவில் பெங்களூரு, மும்பை, கொச்சி, டெல்லி, ஐதராபாத், லக்னோ ஆகிய 6 நகரங்களுக்கு விமானங்களை இயக்கி வருகிறது.

இந்நிலையில், 7-வது நகரமாக, கேரள மாநிலம் கோழிக்கோடுக்கு விமான சேவையை அறிமுகப்படுத்துகிறது. கோழிக்கோடுக்கு அடுத்த மாதம் (பிப்ரவரி) 1-ந் தேதியில் இருந்து வாரத்துக்கு 4 விமானங்களை இயக்குகிறது. ரியாத் நகரில் உள்ள மன்னர் காலித் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இந்த விமானங்கள் இயக்கப்படும்.

இதற்கான டிக்கெட்டுகளை சவுதியா ஏர்லைன்சின் இணையதளம் மற்றும் செயலிகள் மூலம் முன்பதிவுகள் இப்போது தொடங்கி உள்ளன.

சவுதியா தற்போது இந்தியாவிற்கும், சவுதி அரேபியாவிற்கும் இடையே 58 வாராந்திர விமானங்களை இயக்குகிறது, இது நாட்டின் ஏழு முக்கிய நகரங்களை இணைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எந்த பாம்பு கடித்தது என தெரியவில்லை... ஆஸ்பத்திரிக்கு 3 பாம்புகளுடன் வந்தவரால் பரபரப்பு

**பாட்னா, ஜன.14:**

பீகார் மாநிலம், ராஜ்பூரை சேர்ந்தவர் கவுதம் குமார். இவர் பாம்பு பிடிக்கும் தொழில் செய்து வருகிறார். நேற்று காலை அப்பகுதியை சேர்ந்த ஒருவர் தங்களது வீட்டிற்குள் பாம்புகள் புகுந்துவிட்டதாக கவுதம் குமாருக்கு தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற கவுதம்குமார் அவரது வீட்டில் இருந்த 3 நாகப் பாம்புகளை லாவகமாக பிடித்து காட்டில் விடுவதற்காக எடுத்துச் சென்றார். அப்போது 3 பாம்புகளில் ஒரு பாம்பு கவுதம் குமாரை கடித்துவிட்டது. தன்னைக் கடித்தது எந்த பாம்பு என்று தெரியாததால் 3 பாம்புகளுடன் அந்த பகுதியில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றார்.



3 நாகப்பாம்புகளுடன் ஒருவர் சிகிச்சைக்கு வந்ததை கண்ட ஆஸ்பத்திரி ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். நடந்த சம்பவங்களை டாக்டர்களிடம் கவுதம் குமார் விளக்கினார்.

இது குறித்து டாக்டர்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். வனத்துறையினர் ஆஸ்பத்திரிக்கு வந்து பாம்புகளை மீட்டு எடுத்துச் சென்றனர். டாக்டர்கள் கவுதம் குமாருக்கு சிகிச்சை அளித்து காப்பாற்றினர். பாம்பு கடித்தால் விரைவாக உடல் முழுவதும் விஷம் பரவும் என்று தெரிந்தும் கவுதம் குமார் கவலைப்பட வில்லை.

டாக்டர்கள் அவரிடம் இது போன்ற பாம்புகளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வருவது ஆபத்தானது போட்டோ எடுத்து வந்தால் எந்த வகையான பாம்பு என அறிந்து சிகிச்சை அளிக்க முடியும் என தெரிவித்தனர். இந்த சம்பவத்தால் ஆஸ்பத்திரியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# இன்று மகரஜோதி: சபரிமலையில் குவிந்த பக்தர்கள்

**திருவனந்தபுரம், ஜன.14:**

சபரிமலை அய்யப்பன் கோவிலில் மகரவிளக்கு சீசனின் முத்தாய்ப்பு நிகழ்ச்சியாக இன்று (புதன்கிழமை) மகர ஜோதி தரிசனம் நடக்கிறது. அன்றைய தினம் சாமி அய்யப்பனுக்கு பாரம்பரிய வழக்கப்படி, திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை காட்டப்படும். அவ்வாறு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள், பந்தளம் அரண்மனையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த திருவாபரணங்கள் பந்தளம் ராஜ குடும்ப மூத்த பிரதிநிதி தலைமையில் ஊர்வலமாக சன்னிதானத்திற்கு எடுத்து செல்வது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் திருவாபரண ஊர்வலம் நேற்று பந்தளம் வலிய கோயிக்கல் சாஸ்தா கோவிலில் இருந்து பந்தளம் ராஜ குடும்ப பிரதிநிதி புணர்தம் நாள் பி.என். நாராயணவர்மா தலைமையில் ஊர்வலமாக புறப்பட்டது.

இதனையொட்டி கோவிலில் திருவாபரணங்கள் 3 சந்தன பேழைகளில் வைத்து பூஜிக்கப்பட்டது. பந்தளம் முதல் சன்னிதானம் வரையிலான திருவாபரண ஊர்வலத்திற்கு துணை போலீஸ் சூப்பிரண்டு ஜி.சந்தோஷ் தலைமையிலான திரளான போலீசார் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வார்கள். அவர்களுடன் மருத்துவக் குழு, தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் செல்கிறார்கள். இன்று (புதன்கிழமை) மதியம் திருவாபரண ஊர்வலம் பம்பை கணபதி கோவில் வந்து சேரும். அங்கு சிறிது நேர ஓய்வுக்கு பிறகு திருவாபரண பெட்டிகள் மேள, தாளம் முழங்க தலைச்சுமையாக சன்னிதானத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

மாலை 6 மணிக்கு திருவாபரண பெட்டிகள் 18-ம் படிக்கு கீழ் பகுதியில் வைத்து தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு, மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி ஆகியோரிடம் ஒப்படைக்கப்படும். பிறகு 18-ம் படி வழியாக கொண்டு சென்று திருவாபரணங்கள் அய்யப்பசாமிக்கு அணிவித்து மாலை 6.30 மணிக்கு சிறப்பு தீபாராதனை நடைபெறும். இதனை தொடர்ந்து சபரிமலை பொன்னம்பலமேட்டில் 3 முறை ஜோதி வடிவாய் அய்யப்பன் பக்தர்களுக்கு காட்சி அளிப்பார். அப்போது பக்தர்கள் சரணகோஷம் முழங்க சாமி தரிசனம் செய்வார்கள்.

மகரவிளக்கு பூஜையும், மகரஜோதி தரிசனத்தையும் ஒட்டி பக்தர்கள் கட்டுக்கடங்காமல் குவிந்து வருகின்றனர். பல நாட்களுக்கு முன்பே ஏராளமான பக்தர்கள் மகரஜோதியை தரிசிப்பதற்காக பல்வேறு பகுதிகளில் குடில் கட்டி தங்கியுள்ளனர். மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு சபரிமலையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# முன்னாள் துணை ஜனாதிபதிக்கு உடல்நலக்குறைவு - மருத்துவமனையில் அனுமதி

**புதுடெல்லி, ஜன.14:**

முன்னாள் துணை ஜனாதிபதி ஜெக்தீப் தன்கர் (வயது 74). இவர் 2022 முதல் 2025ம் ஆண்டுவரை நாட்டின் துணை ஜனாதிபதியாக இருந்தார்.

அதன்பின்னர், தனிப்பட்ட காரணங்களுக்காக ஜூலை 21ம் தேதி துணை ஜனாதிபதி பதவியை தன்கர் ராஜினாமா செய்தார்.

இந்நிலையில், முன்னாள் துணை ஜனாதிபதி தன்கர் கடந்த சனிக்கிழமை வீட்டில் வைத்து 2 முறை மயக்கமடைந்துள்ளார்.

இதனை தொடர்ந்து தன்கருக்கு இன்று திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, தன்கர் டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கப்பட்டது.

தற்போது தன்கர் நலமுடன் உள்ளதாகவும் அவர் மருத்துவமனையில் டாக்டர்கள் கண்காணிப்பில் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லி: காற்று மாசு அதிகரிப்பு, வாட்டும் குளிர்; குறைந்தபட்ச வெப்பநிலை 4 டிகிரியாக பதிவு

**புதுடெல்லி ஜன.14:**

நாட்டின் தலைநகர் டெல்லியில் கடுமையான குளிர்ச்சி நிலவுகிறது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் குறைந்தபட்ச வெப்பநிலை நேற்று 3 டிகிரியாக பதிவாகி இருந்தது. நேற்று காலை 4 டிகிரி என்ற அளவில் உள்ளது.

இதில், ஆயாநகர் பகுதியில் நேற்று குறைந்தபட்ச வெப்பநிலை 2.9 டிகிரியாக பதிவாகி இருந்தது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. கடந்த ஞாயிறன்று இரவில் பல்வேறு இடங்களிலும் குளிர் அலை பரவியது. இதனால் மக்கள் வீடுகளிலேயே முடங்கி கிடக்கும் சூழல் ஏற்பட்டது.



பாலம் நகரில் குறைந்தபட்ச வெப்பநிலை 3 டிகிரியாக பதிவாகியது. சப்தர்ஜங் நகரில் 4.8 டிகிரியாக பதிவாகி இருந்தது. அது இன்றிரவு 3 டிகிரியாக இருக்கும் என தகவல் தெரிவிக்கின்றது. இதேபோன்று ரிட்ஜ் ஸ்டேசன் பகுதியில் குறைந்தபட்ச வெப்பநிலை 3.7 டிகிரியாகவும், அதிகபட்ச வெப்பநிலை 18.8 டிகிரியாகவும் இருந்தது.

டெல்லியில் காற்றின் தரமும் கூட மோசமடைந்து உள்ளது. இதன்படி, ஒட்டுமொத்த அளவில் டெல்லியில் காற்று தர குறியீடு 337 ஆக உள்ளது என மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்து உள்ளது. இதுதவிர, காஷ்மீர், இமாசல பிரதேசம், உத்தரகாண்ட் உள்ளிட்ட வடமாநிலங்களின் பல பகுதிகளிலும் கடுமையான குளிர் மக்களை வாட்டி வருகிறது.

# பிப்.1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல்; மக்களவை சபாநாயகர் அறிவிப்பு

**புதுடெல்லி, ஜன.14:**

மத்திய பட்ஜெட் ஆண்டுதோறும் பிப்ரவரி 1ம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், 2026-27ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1ம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா இன்று அறிவித்துள்ளார்.

அதன்படி, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் 28ம் தேதி தொடங்குகிறது. பட்ஜெட் கூட்டத்தொடரின் தொடக்க நாளில் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் சேர்ந்த கூட்டு அவை ஜனாதிபதி உரையுடன் தொடங்குகிறது. ஜனாதிபதி திரவுபதி முர்மு துவக்க உரையாற்றி பட்ஜெட் கூட்டத்தொடரை தொடங்கி வைக்கிறார். ஜனாதிபதி உரைக்குப்பின் நிதி மந்திரி



நிர்மலா சீதாராமன் பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறார்.

இதனை தொடர்ந்து பிப்ரவரி 1ம் தேதி மத்திய பட்ஜெட்டை நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார். இதையடுத்து, பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற உள்ளது. பட்ஜெட் கூட்டத்தொடர் முதற்கட்டமாக பிப்ரவரி 13ம் தேதி வரை நடைபெறுகிறது. அதன்பின்னர், மீண்டும் மார்ச் 9ம் தேதி தொடங்கும் பட்ஜெட் கூட்டத்தொடர் ஏப்ரல் 2ம் தேதி வரை நடைபெற உள்ளது.




## ரேசன் கடையில் பொங்கல் பரிசு வாங்க சென்றபோது தகராறு: கைரேகை எந்திரத்தை தூக்கி சென்றவரால் பரபரப்பு



**தென்காசி, ஜன.14:** தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பகுதியை சேர்ந்தவர் ரமேஷ். கட்டிட தொழிலாளி. இவரது முதல் மனைவி மூக்கம்மாள். இவர்களுக்கு சூர்யா என்ற மகன் உள்ளார். மூக்கம்மாள் சில ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்து விட்டார். இதனிடையே மகாலட்சுமி என்பவரை ரமேஷ் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். சூர்யா தனது தாத்தாவுடன் தனி வீட்டில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில் ரமேஷ் தனது 2-வது மனைவி மகாலட்சுமியுடன் அப்பகுதியில் உள்ள ரேசன் கடைக்கு தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு வாங்குவதற்கு சென்றுள்ளார். டோக்கனை கொடுத்து விற்பனையாளரிடம் பரிசு தொகுப்பை கேட்டுள்ளார். அப்போது, ஏற்கனவே பொங்கல் பரிசு தொகுப்பை உங்களது மகன் சூர்யா வாங்கி சென்று விட்டதாக விற்பனையாளர் தெரிவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த ரமேஷ், மகாலட்சுமி இருவரும் விற்பனையாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பொதுமக்கள் அவர்களை சமாதானப்படுத்த முயன்றனர். ஆனால் ஆத்திரமடைந்த அவர்கள் இருவரும் ரேசன் கடையிலிருந்த கைரேகை வைக்கும் எந்திரத்தை கையில் எடுத்தனர். மேலும் இந்த எந்திரம் இருந்தால் தானே எல்லாருக்கும் பணம் கொடுப்பாய் என்று கூறி அவதூறாக பேசிவிட்டு எந்திரத்தை தங்களது வீட்டுக்கு தூக்கி சென்று விட்டனர்.

பின்னர் சிறிது நேரம் கழித்து எந்திரத்தை கொண்டு வந்து கடையில் கொடுத்த ரமேஷ், கடை ஊழியருக்கு கொலை மிரட்டல் விடுத்து சென்றார். இந்த சம்பவம் தொடர்பாக கடை ஊழியர் போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் விசாரணை நடத்தி அரசு ஊழியரை அவதூறாக பேசி, கொலை மிரட்டல் விடுத்து, எந்திரத்தை தூக்கி சென்றதாக ரமேஷ், மகாலட்சுமி ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர். மேலும் ரமேசை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## புதுக்கோட்டையில் ஜல்லிக்கட்டு வீரர் ஓட ஓட விரட்டி வெட்டி படுகொலை



**புதுக்கோட்டை, ஜன.14:** புதுக்கோட்டை மாவட்டம் வேப்பங்குடியை சேர்ந்தவர் ஜெய்சங்கர் மகன் இன்பரசன் (வயது 23). ஜல்லிக்கட்டு வீரரான இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த விக்னேஷ் என்பவருக்கும் இடையே ஜல்லிக்கட்டு காளைகளை வாங்கி விற்பது மற்றும் ஜல்லிக்கட்டு காளைகளை அடக்குவது, ஜல்லிக்கட்டு காளைகளை வளர்ப்பது ஆகியவற்றில் முன்விரோதம் இருந்து வந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இன்பரசன் காளைகளை வாங்குவதற்குகாக வெளியூர் சென்றுவிட்டு இரவில் ஊர் திரும்பினார். இன்று காலை அவர் வேலைக்கு செல்ல தயாராகி வந்தார். பின்னர் பெற்றோரிடம் கூறிவிட்டு வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றார். அவர் அழகாம்பாள்புரம் அரசு பள்ளி அருகே நடந்து சென்றபோது ஒரு கும்பல் அவரை வழிமறித்தது. அவர்கள் திடீரென்று தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தி, அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் அவரை சுற்றி வளைத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த இன்பரசன் அவர்கள் பிடியில் இருந்து தப்பி ஓடினார்.

ஆனாலும் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் அவரை ஓட ஓட விரட்டினர். அப்போது நிலை தடுமாறி கீழே விழுந்த அவரை கொலை வெறி கும்பல் கைகள் இருந்தால்தானே காளைகளை அடக்குவாய் என்று கூறியவாறு, இரண்டு கைகளையும் வெட்டினர். மேலும் உடலின் பல்வேறு இடங்களில் இன்பரசனை சரமாரியாக வெட்டி சாய்த்தனர். இதில் இன்பரசன் ரத்த வெள்ளத்தில் சரிந்தார். பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டது. இதைப்பார்த்த அந்த வழியாக வந்தவர்கள் உயிருக்கு போராடிய இன்பரசனை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியிலேயே இன்பரசன் உயிரிழந்தார்.

இது குறித்து தகவலின் பேரில் வல்லதரிஆக்கோட்டை போலீசார் விரைந்து சென்று கொலையுண்ட இன்பரசன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். சம்பவ இடத்தில் இன்ஸ்பெக்டர் நளினி விசாரணை நடத்தினார். இந்த கொலை சம்பவத்தில் இன்பரச்னின் எதிரியாக இருந்த விக்னேஷ் உள்ளிட்ட 7 பேர் ஈடுபட்டதாக போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து முதல்கட்ட விசாரணையை தொடங்கி உள்ளனர். மேலும் இதில் தொடர்புடைய விக்னேஷ் உள்ளிட்டவர்களை தீவிரமாக தேடி வருகிறார்கள்.

## ராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேரை கைது செய்த இலங்கை கடற்படை



**சென்னை, ஜன.14:** தமிழகம் மற்றும் புதுவையை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும் மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இந்நிலையில் நெடுந்தீவு பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 10 ராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் ஒரு விசைப்படகை, இலங்கை கடற்படை சிறைப்பிடித்து சென்றதாகவும், யாழ்ப்பாணம் மீன்வளத் துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் ஒப்படைக்கப்பட இருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடைய செய்துள்ளது. இலங்கை கடற்படை அத்துமீறி நடவடிக்கை எடுத்து மீனவர்களை கைது செய்து இருப்பதாகவும், எனவே அவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வந்தே பாரத் ஸ்லீப்பர் ரெயில்: ஆர்.ஏ.சி. மற்றும் காத்திருப்புப் பட்டியல் முறைகள் இருக்காது



**சென்னை, ஜன.14:** நாடு முழுவதும் வந்தே பாரத் ரெயில்களுக்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. சொகுசான பயணம், சரியான நேரத்திற்கு தங்களை தேடி வரும் உணவு, குளிர்சாதன வசதி என சிறப்பு ஏற்பாடுகள் இந்த ரெயிலில் பயணிகளுக்கு செய்து தரப்பட்டுள்ளன.

இந்தநிலையில் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ள வந்தே பாரத் ஸ்லீப்பர் (படுக்கை வசதி கொண்ட) ரெயில்களில், இனி ஆர்.ஏ.சி. மற்றும் காத்திருப்புப் பட்டியல் முறைகள் இருக்காது என்று இந்திய ரெயில்வே அறிவித்துள்ளது. இது குறித்த விரிவான கட்டண விவரங்களையும் ரெயில்வே வாரியம் வெளியிட்டுள்ளது. அதன்படி வந்தே பாரத் ஸ்லீப்பர் ரெயில்களில் பயணம் செய்ய, உறுதிசெய்யப்பட்ட டிக்கெட்டுகள் வைத்திருப்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

காத்திருப்பு பட்டியல் மற்றும் ஆர்.ஏ.சி. டிக்கெட்டுகள் மட்டுமின்றி, பகுதி அளவு உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டுகளும் இந்த ரெயில்களில் வழங்கப்படாது. முன்பதிவு காலம் தொடங்கும் போதே அனைத்து படுக்கை வசதிகளும் பயணிகளுக்குக் கிடைக்கும். இதில் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் மற்றும் பணியில் இருப்பவர்களுக்கான 'டியூட்டி பாஸ்' ஆகிய ஒதுக்கீடுகள் மட்டுமே நடைமுறையில் இருக்கும். டிக்கெட் ரத்து செய்து பணத்தைப் திரும்பப் பெறும் விதிமுறைகள், மற்ற எக்ஸ்பிரஸ் ரெயில்க ளைப் போலவே இதிலும் தொடரும்.

குறைந்தபட்சம் 400 கி.மீ. வரை ஏ.சி. முதல் வகுப்பு ரூ.1,520, ஏ.சி. 2-ம் வகுப்பு ரூ.1,240, ஏ.சி. 3-ம் வகுப்பு ரூ.960 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஐ.சி.எப். மற்றும் பெமல் நிறுவனங்கள் இணைந்து 10 ரெயில்களைத்தயாரித்து வருகின்றன.

இதில் முதல் ரெயில் கவுஹாத்தி-ஹவுரா பாதையில் இயக்கப்பட உள்ளது. இரண்டாவது ரெயில் வடக்கு ரெயில்வேக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து தயாராகும் ரெயில்களும் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைப் புற ரெயில் வேக்கே முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து ஐ.சி.எப். மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், முதல் 10 ரெயில்களில் 6 ரெயில்கள் மார்ச் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வந்துவிடும். இந்த 10 ரெயில்கள் முழுமையாக தயாரான பிறகு, ஐ.சி. எப். நிறுவனம் தனது சொந்த தயாரிப்பில் சுமார் 50 ஸ்லீப்பர் ரெயில்களைத் தயாரிக்கும் பணியைத் தொடங்கும் என்றார்.

## தமிழகத்தில் ஜன.15 முதல் வறண்ட வானிலை!



**சென்னை, ஜன.14:** தமிழகத்தில் ஜனவரி 15-ம் தேதி முதல் வறண்ட வானிலை நிலவக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: குமரிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஜன.13) தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

14-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 15 முதல் 18-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக்கு வாய்ப்பில்லை. குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டி நிலவக்கூடும். தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம், ஊத்து, நாலுமுக்கில் தலா 7 செமீ, காக்காச்சி, நீலகிரி மாவட்டம் குன்னூரில் தலா 5 செமீ, கோடநாடு, கோத்தகிரி, திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொங்கல் பண்டிகை: ஆம்னி பஸ்கள் அதிக கட்டணம் வசூலித்தால் புகார் அளிக்க உதவி எண்கள் அறிவிப்பு



**சென்னை, ஜன.14:** பொங்கல் பண்டிகை, தொடர் விடுமுறையையொட்டி சென்னை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு வருகின்றனர். அதேவேளை, பொங்கல் பண்டிகை, தொடர் விடுமுறையை பயன்படுத்தி தனியார் ஆம்னி பஸ்கள் கட்டண கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலிப்பது தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்க உதவி எண்களை போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் வெளியிட்ட அறிக்கையில்,

பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (12.01.2026 முதல் 18.01.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பஸ்கள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் மற்றும் அனுமதிக்குப்புறம்பாக இயங்கும் ஆம்னி பஸ்களை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும், வாகனங்களை சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் அதிக அளவில் தங்களது சொந்த ஊருக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதால் ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலிப்பதாக புகார் வருவதை தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொதுமக்கள் கீழ்காணும் எண்கள் மூலம் தொலைப்பேசி வாயிலாகவோ, வாட்ஸ் ஆப் மூலம் குறுஞ்செய்தி அல்லது குரல் பதிவாகவோ புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வ.எண் ஆணையரகம் தொலைபேசி எண்கள்

1 போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151

2 இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) 99442 53404

3 இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) 97905 50052

4 இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை 90953 66394

5 இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் 91235 93971

6 துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் 96773 98825

7 துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் 98400 23011

8 துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423

9 துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 80569 40040

10 துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343

11 துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800

12 துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011

13 துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரப்பலாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பு



**திண்டுக்கல், ஜன.14:** திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே வடகாடு மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டி பரப்பலாறு அணை உள்ளது. இந்த அணையின் மொத்த நீர்மட்டம் 90 அடியாகும். இந்நிலையில், பாசன வசதிக்காக பரப்பலாறு அணையில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நீர்வளத்துறை செயலாளர் வெளியிட்ட அறிக்கையில்,

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலிருந்து, பெருமாள்குளம், முத்துபூபாலசமுத்திரம் கண்மாய், சடையகுளம், செங்குளம், இராமசமுத்திரக்கண்மாய் மற்றும் ஜவ்வாதுப்பட்டி பெரியகுளம் ஆகியவற்றின் கீழ் பாசனம் பெறும் பழைய பாசன நிலங்களில், நிலையிலுள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டு 13.01.2026 முதல் 23.01.2026 வரை 51.30 மில்லியன் கன அடிக்கு மிகாமல் (நீரிழப்பு உட்பட) தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்திற்குட்பட்ட தாசாரிபட்டி, விருப்பாட்சி, தங்கச்சியம்மாபட்டி, வக்கம்பட்டி, வெரியப்பூர் மற்றும் ஜவ்வாதுப்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள 1323.00 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேவகோட்டை நகர சிவன் கோவிலில் படியளக்கும் விழா



**சிவகங்கை, ஜன.14:** தேவகோட்டை நகர் சிவன் கோவிலில் வருடந்தோறும் மார்கழி அஷ்டமி தினத்தன்று சிவபெருமான் உலகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் படியளக்கும் உற்சவம் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டிற்கான விழா நேற்று நடைபெற்றது. இதையொட்டி அதிகாலை சிவபெருமான், மீனாட்சி அம்மன் மற்றும் உற்சவர்களுக்கு பல்வேறு வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்று, பின்னர் சுவாமி வீதியுலா நடைபெற்றது.

கோவில் முன் மலர்களால் அலங்காரம் செய்து நிறுத்தப்பட்டிருந்த சப்பரங்களில் உற்சவர்கள் எழுந்தருளினர். பின்னர் இந்த சப்பரங்கள் வட்டாணம் சாலை, பழைய சருகனி ரோடு, தியாகிகள் சாலை, பேருந்து நிலையம் வழியாக வலம் வந்து கோவிலை வந்தடைந்தன.

அதனைத் தொடர்ந்து கோவிலில் சுவாமிகளுக்கு சிறப்பு தீபாராதனை நடைபெற்று சிவபெருமான் சன்னதியில் படியளக்கும் விழா நடைபெற்றது. இறைவன் தங்க படியால் ஜீவராசிகளுக்கு படியளக்கும் நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு, அரிசி பெற்று சென்றனர்.

## புதுச்சேரியில் ஓடும் பேருந்தில் தீ பரவல்: ஆட்டோ ஓட்டுநர் எச்சரிக்கையால் உயிர் தப்பிய பயணிகள்



**புதுச்சேரி, ஜன.14:** புதுச்சேரியில் 100 அடி சாலையின் மேம்பாலத்தின் இருந்து கீழ் நோக்கி இறங்கிய பேருந்தில் தீ விபத்து ஏற்பட்டதை கவனித்த ஆட்டோ ஓட்டுநர் கொடுத்த எச்சரிக்கையால், பேருந்தில் பயணித்த 13 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இருப்பினும் பேருந்தில் இருந்த பொருட்கள் எரிந்து சாம்பல் ஆனது.

புதுச்சேரியில் இருந்து பொள்ளாச்சிக்கு தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான சொகுசு பேருந்து இன்று இரவு 10 மணிக்கு புறப்பட்டு, கடலூர் நோக்கி சென்றது.

அந்த பேருந்து முதலியார்பேட்டை 100 அடி சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தை கடந்து இறங்கிய போது பின்னால் வந்த ஆட்டோ ஓட்டுநர் ஒருவர், பேருந்து ஓட்டுநரை சைகை காட்டி நிறுத்தி, "பேருந்துக்குப் பின்னால் தீ பரவுவதாக" குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்து பேருந்தில் இருந்து 13 பயணிகள் அலறி அடித்து வெளியே இறங்கினர்.

சில நொடிகளில் பேருந்து முழுமையாக தீப்பிடிக்க துவங்கியது. இது குறித்து தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நகரப் பகுதியில் இருந்து இரண்டு வாகனங்கள் விரைந்து வந்து தீயை அணைத்தன. இருப்பினும் பயணிகளின் அனைத்து பொருட்களும் எரிந்து சாம்பல் ஆனது.

பேருந்து இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட தகவல் கிடைத்துள்ளது. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்து முடித்தனர். ஆனால் பேருந்து முழுவதுமாக தீயில் எரிந்து போனது. அதே நேரத்தில் ஆட்டோ ஓட்டுநர் தந்த தகவலால் பேருந்தில் பயணித்த பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர்.

# தமிழகத்தில் நகைக் கடைகளுக்கு ஹிஜாப் அணிந்து வரத் தடையா? - அரசு விளக்கம்



**சென்னை, ஜன.14:** பீகாரில் நகைக்கடைகளில் பெண்கள் முகத்தை மூடி வர தடை விதிக்கப்பட்டது. அதே போல் உ.பி. வாரணாசியிலும் ஹிஜாப் அணிந்து வர நகைக்கடைகள் தடை விதித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் ஹிஜாப் அணியும் இஸ்லாமிய பெண்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, தமிழகத்தில் நகைக் கடைகளுக்கு ஹிஜாப் அணிந்து வரத் தடை சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.

ஆனால் இது தவறான தகவல் என தமிழ்நாடு அரசு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. இதுகுறித்து வெளியிட்டுள்ள பதிவில், "நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை - தமிழ்நாட்டில் அல்ல!

'பாதுகாப்பு காரணங்களுக்காக ஹிஜாப் அணிந்து வருவோருக்கு நகை விற்பனை செய்யமாட்டோம்' என்று நகை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளதாக வதந்தி பரவி வருகிறது.

ஆனால், நகைக் கடைகளுக்கு ஹிஜாப் அணிந்து வரத் தடை என சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல் உண்மையல்ல. சமூக ஊடகங்களில் தவறான தகவல் பரப்பப்படுகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள நகைக்கடைகளில் ஹிஜாபுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக செய்திகளில் வெளியாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் அல்ல. தவறான தகவலைப் பரப்பாதீர்!" என்று கூறப்பட்டுள்ளது.

# 'ரெயில் ஒன்' செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுப்பவர்களுக்கு 3 சதவீத கட்டண சலுகை- இன்று முதல் அமல்




**சென்னை, ஜன.14:** ரெயில்வேயில் முன்பு தனித்தனியாக இருந்த ஐ.ஆர்.சி.டி.சி, யூ.டி.எஸ், என்.டி.இ.எஸ் போன்ற பல செயலிகளின் சேவைகளை ஒருங்கிணைத்து ரெயில்வே அமைச்சகம் 'ரெயில் ஒன்' என்ற செயலியை அறிமுகம் செய்தது.

இந்த செயலியின் மூலம் முன்பதிவு டிக்கெட், முன்பதிவில்லாத டிக்கெட், பிளாட்பார டிக்கெட், ரெயில் வரும் நேரம், புறப்படும் நேரம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள முடியும். ரெயில்வே துறை மற்றும் ரெயில் நிலையங்கள், ரெயில் பெட்டிகளில் உள்ள குறைகள் குறித்து புகார் தெரிவிக்க முடியும். சீசன் டிக்கெட்டும் இந்த செயலி மூலம் பெற முடியும்.

இந்நிலையில் ரெயில் ஒன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுப்பவர்களுக்கு 3 சதவீத கட்டண சலுகையை ரெயில்வே அறிவித்துள்ளது. அதாவது, ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்ட்டர் கூட்டத்தில் முண்டியடித்து செல்வதற்கு பதிலாக செல்போன் செயலி மூலம் டிக்கெட் எடுப்பதை ஊக்குவிக்க இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த கட்டண சலுகை கியூ.ஆர். கோடு மூலம் கட்டணம் செலுத்துபவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது முன்பதிவில்லாத சாதாரண டிக்கெட்டுகளை ரெயில் ஒன் செயலி மூலம் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துபவர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆர்-வாலட் மூலம் பணம் செலுத்துபவர்களுக்கு டிக்கெட் கட்டணத்தில் 3 சதவீதம் திரும்ப பெறும் நடைமுறையில் எந்த மாற்றமும் இல்லை. எனவே, ரெயில் ஒன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுக்கும் அனைத்து பயணிகளுக்கும் நாளை முதல் வருகிற ஜூலை மாதம் 14-ந் தேதி வரை 3 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்படுகிறது.

தென்னக ரெயில்வே மண்டலம் தற்போது 29.5 சதவீதம் செல்போன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் வழங்கி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே சாதாரண டிக்கெட்டுகளுக்கு யூ.டி.எஸ். செயலி பயன்படுத்துபவர்கள் ரெயில் ஒன் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் டிக்கெட் எடுக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், செல்போனில் டிக்கெட் பதிவு செய்தும், முழுமையடையாமலும், அது குறித்த தகவல் கிடைக்கப்பெறாததாலும், அபராதம் செலுத்துவதில் இருந்து தப்பிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

# வாணியம்பாடி அருகே திடீரென லாரி கொழுந்துவிட்டு எரிந்ததால் பரபரப்பு



**திருப்பத்தூர், ஜன.14:** அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் சிமெண்ட் மிக்சிங் லாரியை ஆந்திரா மாநிலம் நெல்லூர் பகுதிக்கு ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். அப்போது திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த கேதண்டபட்டி அருகே லாரியை சாலை ஓரம் நிறுத்தி விட்டு லாரியின் முகப்பு பகுதியில் கேஸ் அடுப்பில் குக்கர் மூலம் சமையல் செய்து கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக திடீரென குக்கர் வெடித்து சுரேஷ் படுகாயம் அடைந்து லாரியின் முகப்பு பகுதியில் இருந்து கீழே குறித்து உயிர் தப்பினார். இதனை தொடர்ந்து லாரி கொழுந்துவிட்டு எரிய தொடங்கியது. அப்போது திடீரென லாரியில் இருந்த சிலிண்டரும் அதிக சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் லாரி கொழுந்துவிட்டு எரிந்தது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு நாட்றம்பள்ளி தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். மேலும் நாட்றம்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று லாரி ஓட்டுனர் சுரேஷ் மற்றும் உதவியாளர் கோகுல் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கீழ்ப்பாக்கத்தில் ரவுடி வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம்:

# குற்றவாளிகளை பிடிக்க 9 தனிப்படைகள் அமைப்பு



**சென்னை, ஜன.14:** சென்னை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் தோழியை பார்க்க வந்த பிரபல ரவுடி ஆதி என்ற ஆதிகேசவனை 6 பேர் கொண்ட கும்பல் நேற்று சரமாரியாக வெட்டிக்கொலை செய்தது. இந்த கொலை சம்பவம் தொடர்பாக கூடுதல் போலீஸ் கமிஷனர் நரேந்திரன் நாயர் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஆதி என்ற ஆதிகேசவன் உள்பட சிலர் ஆஸ்பத்திரியின் பிரசவ வார்டுக்கு எதிரே அமர்ந்து மது குடித்துவிட்டு அங்கேயே தூங்கி உள்ளனர். அவர்களை போலீசார் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற அறிவுறுத்தியும் வெளியேறவில்லை. ஆதிகேசவன் சரித்திர பதிவேடு குற்றவாளி. 2022-ம் ஆண்டு நடந்த கொலை வழக்கில் 2 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டு தற்போது தான் வெளியே வந்தார். ஆதி இருக்கும் இடத்தை அவருடன் இருந்த சிலரே கொலைகார கும்பலிடம் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை கைது செய்ய 9 தனிப்படை அமைத்துள்ளோம்.

பழிக்கு பழியாக இந்த கொலை நடந்துள்ளது என முதல்கட்ட புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் நடந்த நேரத்தில் ஆஸ்பத்திரியில் ரோந்து பணியில் இருந்த போலீசார் உள்பட போலீஸ் அதிகாரிகள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படும். இரவு பணியில் 10 போலீசார் இருந்தனர். அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை பாயும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஆஜரான விஜய்யிடம் 7 மணி நேரம் விசாரணை

**சென்னை, ஜன.14:** கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் நேற்று ஆஜரான தவெக தலைவர் விஜய்யிடம் அதிகாரிகள் 7 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த 2025 செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில், இந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது. சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் ஆய்வு மேற்கொண்டும், 200-க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தியும் பல்வேறு ஆதாரங்களை சிபிஐ அதிகாரிகள் திரட்டினர்.

டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்துக்கு தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல் குமார் உள்ளிட்ட நிர்வாகிகளை வரவழைத்து, அதிகாரிகள் சுமார் 20 மணி நேரம் விசாரணை நடத்தினர். கரூர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. விஜய் பிரச்சாரம் மேற்கொண்ட பேருந்

தையும் சிபிஐ மற்றும் மத்திய தடயவியல் ஆய்வக நிபுணர்கள் ஆய்வு செய்தனர். அதில் பொருத்தப்பட்டுள்ள நவீன கண்காணிப்பு கேமராக்கள், அதில் பதிவான காட்சிகள் குறித்து பேருந்து ஓட்டுநர் பரணிதரனிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதற்கிடையே, டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஜன.12-ம் தேதி (நேற்று) விசாரணைக்கு ஆஜராகுமாறு விஜய்க்கு சிபிஐ கடந்த 6-ம் தேதி சம்மன் அனுப்பியது. சென்னையில் இருந்து விஜய் நேற்று காலை 7.40 மணிக்கு தனி



விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார். அவருடன் தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணை பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல்குமார், உதவியாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள், வழக்கறிஞர்களும் சென்றனர்.

டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் விஜய் காலை 11.30 மணி அளவில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்காக திட்டமிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன? இதுதொடர்பாக காவல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் என்னென்ன தகவல்கள் பரிமாறப்பட்டன? 10 ஆயிரம் பேருக்கு அனுமதி வாங்கப்பட்ட நிலையில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதா? திட்டமிட்ட நேரத்தைவிட சுமார் 7 மணி நேரம் தாமதமாக வந்தது ஏன்? உங்கள் வருகை தாமதம் ஆனதால் மக்கள் நீண்ட நேரம் காத்திருந்ததே நெரிசலுக்கு காரணம் என்ற புகாருக்கு உங்கள் விளக்கம் என்ன? என்பது உட்பட பல கேள்விகளை அதிகாரிகள் எழுப்பியுள்ளனர்.

சிபிஐ வசம் இருநத பிரச்சார நிகழ்வு தொடர்பான வீடியோ காட்சிகள், ட்ரோன் கேமரா பதிவுகளை காண்பித்த அதிகாரிகள், அந்த சூழலில் கூட்டத்தை கட்டுப்படுத்த ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என விளக்கம் கேட்டனர். கூட்டத்தின் நடுவே பிரச்சார வாகனம் சென்ற விதம், அதன் வேகம், அதனால் ஏற்பட்ட நெரிசல் குறித்து ஓட்டுநரிடம் ஏற்கெனவே நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் விஜய்யிடம் குறுக்கு விசாரணையும் நடத்தப்பட்டது.

விஜய் பதில்கள் வீடியோவில் பதிவு: சிபிஐ அதிகாரிகளின் அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விஜய்யும் சளைக்காமல் பதில் அளித்துள்ளார். குறிப்பாக, அதிகாரிகளின் கேள்விகளுக்கு விஜய் மிக நிதானமாக பதில் அளித்ததாகவும், விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் கூறப்படுகிறது. அதேநேரம், விசாரணையின் நடுவே சட்ட ரீதியான சில நுணுக்கங்களை விளக்க அவரது வழக்கறிஞர்கள் குழுவும் அங்கு தயாராக இருந்தது. விஜய் அளித்த பதில்களை சிபிஐ அதிகாரிகள் எழுத்துப் பூர்வமாகவும், வீடியோவாகவும் பதிவு செய்து கொண்டனர்.

விசாரணைக்கு நடுவே, விஜய்க்கு ஒரு மணி நேரம் உணவு இடைவேளை வழங்கப்பட்டது. பின்னர், விசாரணை தொடர்ந்து நடைபெற்றது. மாலை 6.15 மணி அளவில் விசாரணை முடிந்த பிறகு, காரில் விஜய் புறப்பட்டுச் சென்றார். வழக்கமாக, கட்சி சார்ந்த நிகழ்வுகள், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்கு விஜய் வெள்ளை சட்டை, காக்கி பேன்ட் அணிந்து செல்வார். நேற்று விசாரணைக்கு கருப்பு சட்டை, பேன்ட் அணிந்து வந்திருந்தார். அவரது வருகை காரணமாக சிபிஐ அலுவலகத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

டிஜிபி, ஐஜியிடமும் தீவிர விசாரணை: டெல்லி சிபிஐ அலுவலகத்தில் விஜய்யிடம் விசாரணை நடந்த அதே நேரத்தில், தமிழக ஆயுதப்படை டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை தலைமையிட கூடுதல் காவல் ஆணையர் ஜோஷி நிர்மல் குமார் ஆகியோரிடமும் சிபிஐ அதிகாரிகள் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

கரூர் நெரிசல் சம்பவத்தின்போது, சட்டம் - ஒழுங்கு ஏடிஜிபியாக இருந்தார் டேவிட்சன் தேவாசீர்வாதம். நெரிசல் நடந்த இடத்துக்கு சென்ற இவர், செய்தியாளர்களை சந்தித்து சம்பவம் தொடர்பாக விரிவாக விளக்கி பேட்டி அளித்திருந்தார். இதனால், இவரிடமும் சிபிஐ அதிகாரிகள் விசாரித்துள்ளனர்.

அதேபோல, நெரிசல் சம்பவம் நடந்தபோது, திருச்சி மத்திய மத்திய மண்டல ஐ.ஜி.யாக இருந்தவர் என்பதால், ஜோஷி நிர்மல் குமாரிடமும் விசாரணை நடை பெற்றுள்ளது. பொங்கல் விடுமுறை முடிந்த பிறகு, தேவைப்பட்டால் மீண்டும் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என கூறி சிபிஐ அதிகாரிகள் இவர்களை அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது.

## அரசியல் கார்னர்

# அண்ணா பற்ற வைத்த தீயை யாராலும் அழிக்க முடியாது..!- உதயநிதி ஸ்டாலின்



**சென்னை, ஜன.14:** சென்னையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றியதாவது:-

இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் தமிழ்நாடு இந்தி திணிப்பை எதிர்க்கும். ஒரு வரலாறை இங்கே சொல்ல விரும்புகிறேன். 1968ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனபோது ஒரு வேலையை செய்தார். அதைப் பற்றி சட்டசபையிலும் பேசி பதிய வைத்திருக்கிறார்.

சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட வடிவம் கொடுத்தார். தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிக் கொள்கையே தவிர, தமிழ்நாட்டில் எப்போதும் மும்மொழிக் கொள்கைக்கு அனுமதி கிடையாது என்றார்.

தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தார். அதற்கு முன்பு வரை சென்னை பிரசிடென்ஸி என்று இருந்தது.

இதை மூன்றையும் செய்துவிட்டு அண்ணா சொன்னார், நான் ஆட்சியில் இருப்பதனால் இந்த மூன்று திட்டத்தையும் அமல்படுத்தினேன்.

பிற்காலங்களில், யாராவது இதை மாற்ற வேண்டும் என்று நினைத்தார்கள் என்றால், அவர்கள் மனதில் பயம் வரும். அந்த பயம் இருக்கும் வரை இந்த தமிழ்நாட்டை ஆள்வது அண்ணாதுரைதான் என்றார்.

நம் அண்ணா வடிவில் இன்றைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பின்பற்றி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அண்ணா பற்ற வைத்த தீயை யாராலும் அழிக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தடையை மீறி கல்லத்தி மரத்துக்கு செல்ல முயற்சி: திருப்பரங்குன்றத்தில் எச்.ராஜா கைது



**மதுரை, ஜன.14:** மதுரை திருப்பரங்குன்றம் மலையில் உள்ள காசி விசுவநாதர் கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நேற்று மாலையில் பா.ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா வந்தார். பின்னர் அவர் தனது ஆதரவாளர்களுடன் மலையில் ஏறி சென்றார். அப்போது கல்லத்தி மரம் உள்ள இடத்திற்கு செல்ல முயன்றார். ஆனால் அங்கு பாதுகாப்புக்கு நின்ற போலீசார் எச்.ராஜாவை தடுத்து நிறுத்தி அங்கு செல்லக்கூடாது எனக்கூறினர். இருப்பினும் அவரும், உடன் வந்த பா.ஜனதாவினர் மலை பாதையில் ஏற முயன்றனர்.

போலீசார் அவர்களை மலை பாதையில் ஏறவிடாமல் கயிறு கட்டி தடுத்தனர். இதனால், போலீசாருக்கும், அவர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. மேலும் கல்லத்தி மரத்தில் கட்டிய கொடியை அகற்றுங்கள் அல்லது அப்பகுதிக்கு எங்களை அனுமதியுங்கள் என்று கேட்டார். அதற்கு போலீசார் மறுத்தனர்.

இதையடுத்து எச்.ராஜா மற்றும் பா.ஜனதாவினர் மலை பாதையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் போராட்டம் நீடித்தது. அங்கு கூடுதல் போலீசார் வரவழைக்கப்பட்டு குவிக்கப்பட்டனர்.இதை தொடர்ந்து மாலை 6.45 மணி அளவில் எச்.ராஜா மற்றும் பா.ஜனதாவினரை போலீசார் மலையில் இருந்து கீழே அழைத்து வந்தனர். பின்னர் மலை அடிவாரம் பழனியாண்டவர் கோவில் வளாகத்தில் போலீஸ் வேன் கொண்டு வரப்பட்டது. அப்போது எச்.ராஜா மற்றும் மதுரை மேற்கு மாவட்ட தலைவர் சிவலிங்கம், திருப்பரங்குன்றம் தொகுதி பொறுப்பாளர் ராக்கப்பன் உள்பட 12 பேரை போலீசார் கைது செய்தனர்.

# மதுரையில் சமத்துவ நடைபயணம்- வைகோவை வரவேற்ற அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்

**திருச்சி, ஜன.14:** திருச்சியில் கடந்த 2-ந்தேதி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ போதைப்பொருள் ஒழிப்பு, மத மோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி சமத்துவ நடைபயணம் தொடங்கினார். இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

திருச்சியிலிருந்து நடைபயணம் தொடங்கிய வைகோ புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நடைபயணத்தை மேற்கொண்டார். அவருடன் துரை வைகோ எம்.பி., மற்றும் முக்கிய நிர்வாகிகள் 100 தொண்டர்கள் என 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நாள்தோறும் வைகோ 15 முதல் 17 கிலோ மீட்டர் நடைபயணம் மேற்கொண்டார். நேற்று முன்தினம் மதுரை மாவட்டம் மேலூர் பகுதிக்கு வைகோ வந்தார். அப்போது கட்சியினர் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் அவர் உத்தங்குடியில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்றைய பயணத்தை முடித்துக் கொண்டார். தொடர்ந்து இன்று 11-வது நாள் நடைபயணமாக காலை ஒத்தக்கடையில் இருந்து மதுரை நகரை நோக்கி தனது நிறைவு நடைபயணத்தை வைகோ தொடங்கினார்.

இன்று மாலை மதுரை ஒபுளா படித்துறையில் வைகோ தனது நடை பயணத்தை நிறைவு செய்கிறார். இந்நிலையில், மதுரையில் சமத்துவ நடைபயணம் மேற்கொண்டுள்ள வைகோவை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் வரவேற்றார்.

அண்ணா நகர், தெப்பக்குளம், கீழ வெளி வீதி வழியாக செல்லும் அவர் இன்று மாலை 6 மணிக்கு தனது பயணத்தை நிறைவு செய்கிறார் என்பது குறிப்பிடதக்கது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com